இலவசப் பிரதி
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 20 (26.11.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 56

# வன்முறையைக் கைவிடுவதாக புலிகள் உறுதிதர வேண்டும்!

## ரிச்சர்ட் ஆர்மிரேஜ் கோரிக்கை



(ஒஸ்லோ)

பயங்கரவாதத்தையும் வன்முறைகளையும் கைவிடுவதாக விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என அமெரிக்கப் பிரதி உள்துறை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் கேட்டுக் கொண்டுள்ளார். ஒஸ்லோ மாநாட்டில் பேசியபோதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கையின் இறைமைக்கு குந்தகம் விளைவிக்க மாட்டோம் எனப் புலிகள் உறுதியளிக்க வேண்டும். பயங்கரவாத நடவடிக்கை மூலம் இலக்கை அடையமுடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும். தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாகப் புலிகள் அறிவிக்க வேண்டும் எனவும் தனதுரையில் ஆர்மிரேஜ் குறிப்பிட்டார்.


# போராட்டத்தை நசுக்காவிடின் வன்முறையைக் கைவிடத் தயார்!

## கலாநிதி பாலசிங்கம் ஒஸ்லோவில் உரை

(ஒஸ்லோ)

தமிழர்களின் அரசியல் போராட்டத்தை நசுக்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தை அரசு தந்தால் நாம் வன்முறைப் போராட்டத்தைக் கைவிடத் தயார் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று ஒஸ்லோவில் தெரிவித்தார்.


புலிகள் ஆயுதப் போராட்டத்தையும் வன்முறைகளையும் கைவிட வேண்டும் என அமெரிக்கப் பிரதி அமைச்சர் ஆர்மிரேஜ் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்குமுகமாக அன்ரன் பாலசிங்கம் அங்கு பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். சமாதானத்திலும் சமரச உடன்படிக்கை குறித்தும் புலிகள் அமைப்பு உண்மையாக நடந்து கொள்வது



(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்கு சர்வதேசம் பெரும் ஆதரவு!

### விண்ணாணம் விநாசியர்



ஆயுதங்கள் விரும்பி ஏந்தப்படயில்லை எண்டது அமெரிக்காக்காரருக்கு விளங்குமே...?

# வட-கிழக்கை மீளக் கட்டியெழுப்ப பாரியதும், துரிதமுமான நிதியுதவி!

(ஒஸ்லோ)

**42 நாடுகள் பங்குபற்றிய ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்- சமாதான முயற்சிகளுக்கும், அதனை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள், அரசாங்கம், நோர்வே ஆகிய முத்தரப்புக்கும் ஆதரவு தெரிவிக்கப்பட்டதோடு, பெருந்தொகையான நிதி உதவியுடன் வட-கிழக்கை மீளக்கட்டியெழுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.**

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும், உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்று உள்ளூர் நேரப்படி பத்து மணிக்கு ஆரம்பமானது.

ஒஸ்லோ - ஹோல்மென் கொலென பார்க் ஹோட்டலில் ஆரம்பமான இக்கூட்டத்தில் 42 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களும், உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் தொடக்கத்தில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ், பிரிட்டிஷ் அமைச்சர் கிளாயர் ஷோர்ட், விடுத

(10ஆம் பக்கம் பார்க்க)



ரணிலுடன் நோர்வேப் பிரதமர் பொன்டவிக்.

# குறைவில்லா உதவிகளை நோர்வே வழங்க உறுதி!

## ரணிலுடனான சந்திப்பில் நோர்வேப் பிரதமர்

(ஒஸ்லோ)

சமாதான முயற்சிகள் வெற்றிபெறும்வரை ஒவ்வொரு கட்டத்திலும் குறைவில்லாத உதவிகளை வழங்கப்போவதாக நோர்வே அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

ஒஸ்லோ மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமது அலுவலகத்தில் சந்தித்த அந்நாட்டுப் பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

(10ஆம் பக்கம் பர்க்க)

# அடுத்த ஆண்டு இலங்கையில் நிரந்தர சமாதானம் மலரும்!

## ஒஸ்லோ கூட்டத்தில் ரணில்

அடுத்த ஆண்டில் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுவிடும். தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களின் வெற்றி நீண்ட இரவின் பின்னர் சூரிய வெளிச்சம் ஏற்படுவது போன்ற உணர்வை ஏற்படுத்தியிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறும் - சமாதானத்துக்கு ஆதரவு வழங்கும் மாநாட்டில் ஆரம்ப உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்த மாநாட்டில் பெற்றுக்கொள்ளப்படும் வெற்றியின் மூலம் சமாதான முயற்சிகள் பெரிதும் உறுதிப்படுத்தப்பட்டு முன்னோக்கிச் செல்லும். இதற்குச் சர்வதேச ஒத்துழைப்பு விரைவாகக் கிடைக்காது போனால்

(10ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் மாவீரர் நினைவாலயத் திறப்பு விழாவில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அணிவகுப்பு.

### சாள்ஸ் அன்ரனி படையணியின் நினைவாலயம் திறப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் போராட்டத்திற்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர்கள் நினைவாக கிளிநொச்சியில் நினைவாலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிக்கு பிரிட்டனும் பாராட்டு!

(ஒஸ்லோ)

இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகளுக்குத் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ள பிரிட்டன், விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் நோர்வேயையும் பாராட்டியுள்ளது.

ஒஸ்லோவில் நேற்று நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உரையாற்றிய பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்கான செயலாளர் கிளாயர் ஷோர்ட் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, உதவி வழங்குபவர்களாகிய நாம் வழக்கம்போல நடந்து கொண்

(10ஆம் பக்கம் பர்க்க)

### இன்று தேசியத் தலைவரின்



48ஆவது பிறந்த தினம்

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
SERENDIB
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை முதலாவது படத்திலும், நேற்று நடைபெற்ற மாவீரர் எழுச்சிநாள் ஆரம்பத்தில் அங்கு தேசியக்கொடி ஏற்றிவைக்கும் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை இரண்டாவது படத்திலும் மாவீரர் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தும் தாயொருவரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : லிவிங்ஸ்ரன்)

# தலைவர் வழிகாட்டலில் சாதனைகளுடன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி!

## மாவீரர் நினைவாலயத் திறப்பு விழாவில் தளபதி நகுலன்



(கிளிநொச்சி)

எமது தேசியத் தலைவரால் முதலாவது மரபுவழிப் படையணியாக 1991ல் உருவாக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, தன்னிடமிருந்த ஆயுதத்தைக் காப்பதற்காகத் தன்னையே அழித்துக் கொள்ளத் தயங்காதவனின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டு - இன்று பல சாதனைகளைத் தனது எண்ணற்ற தியாகங்களினூடாகப் படைத்திருக்கிறது என - சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி லெப்ரினன்ட் கேணல் நகுலன் கூறினார்.

நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற - சாள்ஸ் அன்ரனி சிறப்புத் படையணியில் வீரச்சாவடைந்தோர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு - உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் - 'வன்னி விக்கிரம' சமர் முதலாக 75க்கும் மேற்பட்ட சமர்க் களங்களைக் கடந்தும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தன் முத்திரை பதித்துச் செல்கிறது.

களத்தில் கால் போனதைப் பற்றிக் கூடக் கவலைப்படாது, நான் கத்தமாட்டேன் - தொடர்ந்து முன்னேறுங்கள் என வளலாயில் உறுதி காட்டிய வீரன்,

எதிரியின் டாங்கி காவலரண் மீது ஏறியபோதும், தன்னோடு கைக் குண்டை வெடிக்கவைத்து ஒலுமடுவில் டாங்கியையும் அழித்த போராளி,

எதிரியின் முன்னணி வேலித் தடைகளை அகற்றத் தன்னையே அழித்துப் பாதை ஏற்படுத்திய மாவீரன், என உறுதியாகத் தடம்பதித்தவர்களின் வரலாறே இச்சிறப்புப் படையணியின் வரலாறாகும்.

துணிவு, தந்திரம், பயிற்சி, வெற்றி எனத் தலைவர் காட்டிய இலக்குகளினூடாக - வெற்றிச் சமராடிய சிறப்புப் படையணி, இதுவரை 1054 மாவீரர்களையும், 16 கரும்புலிகளையும் மண்ணின் விடுதலைக்குத் தந்திருக்கிறது.

மாவீரர்களின் பெற்றோர்களே நீங்கள் மனந்தளராதிருங்கள், உங்களது பிள்ளைகளின் ஈகத்தால், எமது இலட்சியம் நிறைவேறியே தீரும் எனவும் கூறினார்.

# கொடியேற்றலுடன் ஆரம்பமான மாவீரர் எழுச்சி நாள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் எழுச்சி நாட்கள் நேற்று தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகி கோப்பாய் துயிலும் இல்லப் பொறுப்பாளர் புவிநாயகம் தலைமையில் எழுச்சி நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. மாவீரர் லெப். மதுஷாவின் தந்தை ச.இரத்தினசிங்கம், மாவீரர்களான வீரவேங்கை குமரன், வீரவேங்கை கசிபனா ஆகியோரின் தாயார், மாவீரர் 2ஆம் லெப் வதனியின் தாயார் ஆகியோர் பொதுச் சுடரேற்றினர். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடிக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. போராட்ட வரலாற்றில் வீரகாவியமான மாவீரர்களுக்கும், உயிரிழந்த பொதுமக்களுக்கும் அகவணக்கம் செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

தொடர்ந்து மாவீரர் நினை[illegible]களை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி, பலாலி ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த பொன்னுத்துரை சசிதரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

# இன்றைய நாள் இனிய நாள்

**26-11-2002 - செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| நட்சத்திரம் | :- | ஆயிலியம் இரவு 11.05 வரை அதன்மேல் மகம் |
| திதி | :- | ஷஷ்டி காலை 8.21 வரை அதன்மேல் ஸப்தமி |
| ராகுகாலம் | :- | 3.12 - 4.42 |
| சுபநேரம் | :- | 10.42 - 12.12 |

**மேடம்** :- மாதா தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, நீரிழிவு நோயாளர் கவனமாக இருத்தல் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- சாதனையை நிலை நாட்டும் சிந்தனை, சங்கீதப் பிரியம், அகத்தில் இன்பம் பொங்கும், தெய்வ வழிபாடு, சமய நூல் பாராயணம், காதில் சிறிய நோய், கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மிதுனம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, கண்ணில் சிறிது நோய், இருதய நோயாளர் சிந்தனை, உணவு முதலியவற்றில் கட்டுப்பாடு தேவை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார நிலை சமம்.

**கர்க்கடகம்** :- எதிலும் திறமை, தெய்வவழிபாடு, உறவினர் கூடுதல், மனத்திற்கு அமைதி கொடுக்கும் உணவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார நிலை சமம்,

**சிங்கம்** :- தேகசுகக் குறைவு, ஞாபக மறதி, கர்வநிலை, வீண் செலவு, அலைச்சல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- செய்தொழில் லாபம், பொதுநல ஈடுபாடு, தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், மனதில் இன்பம் பொங்கும், நல்லோர் உறவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தொழில் முன்னேற்றம், மரியாதை, கௌரவம், சமூக சேவையில் ஈடுபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தெய்வவழிபாடு, பிதா கவலை, எதிரியின் தொல்லை பயந்த நிலை, வைத்தியச் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேகசுகக் குறைவு, தேவையற்ற செலவு, மனக்குழப்பம், தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரியின் தாக்கம். கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மகரம்** :- குடும்பத்தில் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, மதநூல் ஆராய்வு, ஆடைஆபரண அலங்காரம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- பணவரவு, வங்கிக்கடன் வசதி, எடுத்த காரியம் வெற்றி, மனத்தில் சமாதான நிலை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மீனம்** :- தேகசுகக்குறைவு, புத்திரர் சுகக் குறைவு, வைத்தியச் செலவு, மனக்குழப்பம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

# தமிழக அகதிகள் மீளக்குடியமர்வு குறித்து தமிழ்ச்செல்வன் - யு.என்.எச்.சி.ஆர். இணக்கம்!

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழும் அகதிகளை இலங்கையில் மீள அவர்களது இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிற்கும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவராலயத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் பேச்சு நடைபெற்றுள்ளது.



யாழ்.நீராவியடியில் மாவீரர் நினைவாலயத்தை ஈகச்சுடரேற்றி திறந்து வைக்கும் விடுதலைப்புலிகளின் பிரமுகர் தமிழச்சி.

இச்சந்திப்பின்போது, சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழ்நாட்டிலுள்ள அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பான நடவடிக்கைய உடன் எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்திற்கும் இடையில் இவ்வருடம் இடம்பெற்ற உடன்படிக்கையின் பிரகாரம், தமிழ்நாட்டில் இருந்து ஒரு இலட்சம் அகதிகளை மீளக்குடியமர்த்துவது என இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்வடிப்படையில் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் தமிழ்நாட்டு அகதிகளை மீளக்குடியமர்த்த யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளனர்.


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



செல்வன் சாயுகன் விஜயராசா

பருத்தித்துறை, ஓடக்கரை, கல்லூரி வீதியைச் சேர்ந்த விஜயராசா, யோகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாயுகன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அத்தைமார், அன்ரிமார், மாமாமார், சித்தப்பாமார் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (042)

சிறு விளம்பரம்

வீடு தேவை

அலுவலகப் பாவனைக்கு யாழ். புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்திற்குத் தேவைப்படுகின்றது. யாழ்.மாநகர சபை எல்லை, அல்லது கொக்குவில், காங்கேசன் துறை வீதி அல்லது பலாலி வீதி, கோண்டாவில் வரை விரும்பத்தக்கது.

தொடர்பு:
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம
T.P.222 - 2263 (சி-211)

நிறஞ்சனாஸ் சங்கானை

25-11-2002 முதல் வினித், நந்தினி நடித்த ஆவாரம்பூ

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
புதன், வியாழன் மட்டும் இரவு 8.45 காட்சி

BLACK EAGLE (கராட்டிப்படம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 5.45, 7.45 (சி-139)

ராஜா யாழ்ப்பாணம்.



STR பிலிம்ஸ் வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்) கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)

# காங்கேசன் துறைமுகம் நவீன மயப்படுத்தப்படும்!

(கொழும்பு)

காங்கேசன்துறைத் துறைமுகத்தை நவீனமயப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

துறைமுகத்தை நவீனமயப்படுத்துவது தொடர்பான திட்டங்கள் மறறும் யோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்று வெளிநாட்டு மூல வளங்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. இத் திட்ட அறிக்கையை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை தயாரித்துள்ளது.

இறங்குதுறையை 1330 மீற்றர் தூரம் வரை நீடிப்பதும், துறைமுகத்துக்குச் செல்லும் வீதியைப் புனரமைப்பதும் இந்த நவீன மயப்படுத்தும் திட்டத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்கள் எனத் தெரியவருகின்றது.

துறைமுக, அபிவிருத்தி மற்றும் நவீன மயப்படுத்தலுக்காக வெளிநாட்டு உதவிகளையும் பெறுவதற்கு துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சுத் தீமானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# தூதுவர்கள் நீதிமன்றம் வராததால் நாடு கடத்தப்பட்டோர் சிறையில்!

(கொழும்பு நிருபர்)

ஐரோப்பிய நாடுகளில் இருந்து நாடு கடத்தப்பட்டவர் மீதான வழக்கு விசாரணைகள் நீண்ட காலத்துக்கு இழுத்தடிக்கப்படுவதற்கு அந்நாட்டுத் தூதுவர்களே காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள் தொடாபான வழக்குகளில், எந்த நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டார்களோ அந்நாடுகளின் தூதுவர்களே விஸா தொடர்பான சாட்சியங்களை அளிக்க வேண்டும்.

ஆனால் வெளிநாட்டுத் தூதுவர்கள் நீதிமன்றங்களில் கட்டாயமாக ஆஜராக சட்ட ஏற்பாடுகள் கிடையாது என்பதால்,தூதுவர்கள் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்றுக் கொள்வதில்லை எனத் தெரியவருகின்றது.

இதனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீண்ட நாட்கள் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுவதாகவும், பொலிஸ் தரப்பும் இதனால் நெருக்கடிக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அடர்ந்த காட்டுப் பகுதியில் அமைந்துள்ள

# மணலாறு துயிலும் இல்லத்துக்கு பொது மக்களும் செல்லலாம்!

(ஊரெழு)

மணலாறு பிரதேசத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வருடம் மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய இராணுவத்தினருடனான மோதல்களின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போராளிகளின் நினைவாகக் கட்டியெழுப்பட்ட மணலாறு மாவீரர் துயிலும் இல்லமானது, விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரணுக்கு அருகில் காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையால் கடந்த காலங்களில் பொது மக்கள் இப்பிரதேசத்திற்குச் செல்ல முடியவில்லை.

தற்போது சமாதானச் சூழ்நிலை உருவாகியதை அடுத்து படையினரின் கெடுபிடிகள் நிறுத்தப்பட்டமையால் இவ்வருடம் மேற்படி மாவீர் இலத்திற்கு பொதுமக்கள் அழைத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

### உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குச் செல்லும்

# அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் மீது சிங்கள அமைப்புகள் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு நிருபர்)

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற அமெரிக்க, பிரிததானிய அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அந்நாடுகளில் இயங்கும் சிங்கள அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இந்த இரண்டு நாடுகளிலும் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் புலிகள் கலந்து கொள்ளும் மாநாட்டுக்கு அமெரிக்கா, பிரித்தானியப் பிரதிநிதிகள் செல்வது நாட்டின் சட்ட திட்டங்களை மீறுகின்ற செயலாகும் என இந்தச் சிங்கள அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

# நெடுந்தீவு நிலைபற்றி கூட்டமைப்புடன் பிரதமர் அடுத்தமாதம் பேச்சு நடத்துவார்

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத முற்பகுதியில் தமிழ்க் கூட்டமைப்பினரோடு நெடுந்தீவு சம்பவத்தைப் பற்றி கலந்துரையாடுவர் எனத் தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமையும் ரணில் விக்கிரமசிங்க - தமிழர் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கடசிகளுடன் இதுபற்றிப் பேசினாலும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியவில்லை.

இந்தச்சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பினர், ஈ.பி.டி.பி உடனடியாக நெடுந்தீவை விட்டு வெளியேற வேணடும் என்று கோரிக்கை விடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.35 |
| லுஹர் | 12.29 |
| அஸர் | 3.51 |
| மஃரிப் | 6.21 |
| இஷா | 7.35 |

# மரத்தாலான விசேட அறையில் நடந்த பாலா - ரணில் சந்திப்பு!

(ஒஸ்லோ)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் ஹொல்மேன்கொலென் ஹோட்டலில் உள்ள மரத்தாலான "சொன்ஜா ஹெனி" சந்திப்பு அறையில் இடம் பெற்றது.

சந்திப்பு அறைக்குள் செல்வதற்கு முன்னர் வாசலில் நின்ற செய்தியாளர்களிடம்- நம்பிக்கையோடும், மகிழ்ச்சியுடனும் சந்திப்புக்குச் செல்வதாக கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

சந்திப்பு அறைக்குள் பிரதமர் ரணில், பாலாவைக் கண்டதும், 'உங்களைச் சந்திப்பது மிகவும் மகிழ்ச்சி பூர்வமானதாக உள்ளது" எனத் தெரிவித்து கைலாகு கொடுத்தார்.

தொடர்ந்து இருவரும் புகைப்படப் பிடிப்பாளர் களுக்காக கைலாகு கொடுத்தபடி காட்சி கொடுத்தனர். அதையடுத்து மூடப்பட்ட அறைக்குள் இரண்டு தரப்பினருக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் பேச்சுக்களில் உடனிருந்தார். பேச்சுவார்த்தையின் முடிவில் இரு தரப்பினரும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதும்- நம்பிக்கையளிக்கக் கூடியதுமான சந்திப்பு இது எனத் தெரிவித்தனர்.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டு போன வீர மரபு மீண்டும் பிறப்பு எடுத்தது. அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால், பிணைக்கப்பட்டு,நீண்ட காலமாகத் தாங்கிக் கொண்டிந்த தமிழ் தேசம் விழித்துக் கொண்டது. இந்த தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

## தமிழீழமாவீரர் எழுச்சி நாள் ~ 2002

## நினைவொலி எழுப்பலும் சுடரேற்றலும்

27ஆம் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழ மெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய. தேவாலய மணிகளும் ஒரு மணித்துளிநேரம் ஒலி எழுப்பும். இந்த நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அக வணக்கம் செலுத்துவார்கள்.

இந்த நினைவொலி எழுப்பப்படும் போது காத்திருந்து ஒரு மணித்துளி அக வணக்கம் செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவொலி எழுப்பப்படும்போது வீதியால் பயணம் செய்பவர்கள், நடந்தாயினும், வாகனத்திலாயினும் போனால் உடன் நின்று பின் ஒரு மணித்துளி நேரம் அந்தந்த இடங்களிலேயே அக வணக்கம் செலுத்தல் வேண்டும்.

துயிலும் இல்ல மைதான நடுவில் - பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தை சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற- மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவார்கள். ஒவ்வொரு இல்லங்களிலும், வாசல்களிலும், மாவீரர்களின் சுடரொளியை மக்கள் ஏற்றுவார்கள்.

சுடரானது சுவாலை விட்டு எரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களினதும் முகங்கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி தோன்றிப் பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றித் தியாக தீபங்கள் இவை எனக் கூறத்தக்கதாக நினைவு கூறப்படவேண்டும். வானத்தில் மின்னும் நச்சத்திரங்கள் போல தமிழீழமெங்கும் மாவீரர்கள் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் எரியும். பொது இடங்களில் பெரிய சுடரொளி ஏற்றியும் நினைவு கூரலாம்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

*தமிழீழ மாவீரர் பணிமனை.*

### நெடுந்தீவில்

# விசேட பொலிஸ் அணி பணிக்கு அமர்த்தப்படும்!

நெடுந்தீவிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விசேட பொலிஸ் அணியொன்றை கடமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது நெடுந்தீவில் கடமையில் இருக்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நெடுந்தீவு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்குப் பதிலாக நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பியினருக்கே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என அப்பகுதி மககளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி நிலைமையைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக விசேட பொலிஸ் அணியொன்று நெடுந்தீவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. சுமார் இருநூறு பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட இவ் விசேட அணியில் தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பொதுமக்கள் ஈ.பி.டி.பி. கட்சியினருக்கு எதிராக எதுவித அச்சமுமின்றி பொலிஸாரிடம் முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் உடனடியாக நடை முறைபடுத்தப்படும் எனவும் நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்த அமைச்சர் மகேஸ்வரனால் மக்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. (க-லி)



ஒஸ்லோ சந்திப்பில் மேலும் சில காட்சிகள்

# தமிழர் தலைவனுக்கு இன்று அகவை 48

## பொங்கு தமிழ் போல புகழ் பெறுக



அண்ணன் வாழி! வாழி!!

## தமிழர் சூரியன் பிரபாகரன் தனித்துவம் வாழ்க!

நான்கு திக்கும் பிரபாகரன் நாதம் எழுகவே!
நான்கு தமிழும் பிரபாகரன் கீதம் எழுதவே!
வாழும் நிலம் தலைவன் வேதம் தொடரவே!
வாழும் தமிழர் புலிகள் வீரம் சுமக்கவே!

தாயகத்தின் பூங்காற்று தலைவனை வாழ்த்தும்
தணியாத நதிவந்து தலைவனைக் காக்கும்
உலகத்தின் தமிழோசை பிரபாகரன் வீரம் பேசும்
உதிக்கின்ற கதிரவன் பிரபாகரன் ஒளியில் வீசும்

தமிழர்கள் புலிகளோடு இணைய வேண்டும்
இல்லாமை தொலைவதற்கு மக்கள் துணையாக வேண்டும்
கோழைகளாய் வாழாமல் தமிழர்கள் வீரர்களாக வேண்டும்
கொடுமைகளை அழிப்பதற்கு பிரபாகரன் அணியாக வேண்டும்

வேங்கை வேந்தன் வெற்றிக்கொடி பறக்க வேண்டும்
விடியும் நிலம் தன் நிறைவில் சிரிக்க வேண்டும்
தூங்கும் மனிதர் நித்திரை கலைந்திடல் வேண்டும்
தோள் சுமக்கும் மனிதர் முத்திரை பொறித்திடல் வேண்டும்

தமிழர் சூரியன் பிரபாகரன் வழியிலே, ஒன்றாக வேண்டும்
தமிழ்மொழியின் கல்வியிலே அறிவியல் வேண்டும்
இமைப்பொழுதும் தூங்காத உழைப்பினிலே மகிழ வேண்டும்
எதுவரினும் அஞ்சாது தமிழினம் வாழ வேண்டும்

மன்னவன் கால்கள் மணற்றியில் பதிய வேண்டும்
மன்னவன் புன்னகையில் மக்கள் விழிக்க வேண்டும்
துள்ளிடும் தமிழ் பிரபாகரன் தோளாக வேண்டும்
வையகம் தேசியத் தலைவரை வாழ்த்த வேண்டும்

தமிழர் சூரியன் பிரபாகரன் தனித்துவம் வாழ்க
தமிழர் சுதந்திரம் பிரபாகரன் வித்துவம் வாழ்க
தமிழர் வீரம் பிரபாகரன் தத்துவம் வாழ்க
தமிழர் உயிராம் பிரபாகரன் மகத்துவம் வாழ்க

- தமிழீழக் கவிராயர்.

தலைவன் வாழுங் காலம் - தலை
நிமிர்ந்து செல்லும் வீரம் - பகை
நினைந்து நெஞ்சில் உறுதி - நாளும்
நிலையில் உயர்ந்து தோன்றும்

தங்கம் நிகரும் தாய்மண் - இங்கு
எங்கள் தமிழன் யாரும் - உயிர்
பங்கம் அடைய வந்தால் - அண்ணன்
அங்கந் துடிக்க எழுவான்

சாதி பேதம் தாழ்வு - உயர்(வு)
சமத்து வந்தான் வாழ்வு - பொது
உடமை யோடு கலைகள் - பண்
பாடு தந்தவா வாழி!

மண்ணில் நல்ல மாட்சி - பொங்க
எண்ணி அரசு ஓச்சி - இங்கு
பண்ணுந் தமிழர் மீட்சி - தந்த
அண்ணன் வாழி! வாழி!!

- சேரன்.த.சிவராசா.

வார்த்தையிலே வடியாத வான் புகழே!
வல்வை வளர்நகர் தந்த வரமே
புற நானூற்றின் புதுப் பதிப்பே
எம் தேசத்தின் நாயகனே
உன் பிறந்த நாளில்
பிறக்கும் உயிர்க்கெல்லாம்
பிறவியிலே வீரம் வரும்.
நீ பிறந்த மண்ணில்
நடக்கும் மழலைகளும்
மலையை பிரட்டி விடும்.

பொய்மை அரசியலை
புறந்தள்ளி
நெருப்பெரியும் சமர்க்களத்தில்
போராடி
சமாதானப் பாதையில் இன்று
சரியாத சரித்திரமாய்
நிற்கின்றாய்!
ஈழத்தின் எரிமலையே
தேசம் உன்னால் தான்
நிமிர்ந்து நிற்கிறது!
ஆனையிறவிலே -உன்
அடியைக் கண்டவர்கள்
சேனை திரட்டி இனி
செருக்களமாட வருவாரோ?


மாங்குளத்தில் - உன்தன்
மறவலிமை பார்த்தவர்கள்
மறந்தாலும் இனி ஒருக்கால்
மல்லாட வருவாரோ!

ஈழமண் இன்று இறுமாந்து கிடக்கிறது
சோகம் அகன்று
துயர் நீங்கி சிரிக்கிறது
தேசத்தின் நாயகனே
எம் ஈழம் விடிய சிறப்பாக வழிகாட்டு
ஆணையிடு - உன் விழி அசைவில்
எரிமலைகள் இருப்பிழக்கும்
காலம் உனக்காக காத்துக் கிடக்கிறது!
நீ பிறந்த பொன்னாள்
மனமார வாழ்த்துகிறோம்!
பொங்கு தமிழ் போல
நீயும் புகழ் பெறுக
நிலவுள்ள காலம் வரை
நிலைபெறுக, வாழ்த்துக்கள்!

- கரிகாலப்பிரியன்.

# மக்களின் உணர்வுகளைக் கருத்திலெடுத்தே அரசியல் கட்சிகள் செயற்படுவது முக்கியம்!

## நெடுந்தீவுச் சம்பவம் பற்றி யாழ். , மன்னார் ஆயர்கள் கூட்டறிக்கை




யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டில் சமாதானத்துக்கான சூழ்நிலை மலர்ந்துவரும் இவ்வேளையில், கிறிஸ்தவ மக்கள் அனைவரும் இறந்து போனவர்களைப் பற்றி நினைக்கும் நவம்பர் மாதத்தில், தமிழ் மக்கள் அனைவரும் சிறப்பாக எம்மண்ணின் மீட்புக்காகத் தம் உயிரைத் துறந்த அனைத்துத் தியாகிகளையும் நினைவு கூரும் நேரத்தில், எமது தமிழ் மண்ணில் குறிப்பாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பதற்றநிலையால் நாம் கவலையடைந்துள்ளோம் என - நெடுந்தீவுப் பிரதேசத்தில் நிலவும் பதற்ற மான சூழ்நிலையை தணிக்கும் முகமாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையும் விடுத்திருக்கும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசியல் கட்சிகள் தம் கட்சி அரசியலை முன்னெடுக்கப் பல்வேறு இடங்களில் செயற்படுவதும் முயற்சிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே. எனினும் அவர்கள் எப்போதும் மக்களுடைய உணர்வுகளைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டியது முக்கியமானது, இயற்கையானது.



மன்னார் ஆயர்

முழு நாட்டின் நலனை மறந்து தனி ஒரு கட்சியின் நலனை மட்டுமே நோக்காகக் கொண்டு உழைப்பது சமாதானத் தேடலுக்கு முரண்பாடானது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். எமது முழு நாட்டின் சமாதானத்தைக் கவனத்திற்கொள்ளாது நாம் செயற்படும்போது எமது நாட்டில் சமாதானத்தை வெறுக்கும் பேரினவாதிகளின் கைகளுக்குள் நாம் சிக்கிவிடுவோம் என்பதும் உண்மையாகும்.

எனவே இப்பேராபத்தில் இருந்து எம்மைக் காத்துக் கொள்ள, தீவகத்தில் தோன்றியுள்ள முறுகல் நிலையைத் தணித்து, அமைதிச் சூழலை ஏற்படுத்த அரசும், விடுதலைப் புலிகளும், ஈ.பி.டி.பி. கட்சியினரும் அனைத்து சம்பந்தப்பட்ட மற்ற அரசியல் கட்சிகளும் மக்களும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென வெகுவினயமாக வேண்டுகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல், பொருளாதார ரீதியாக பொதுநலவாயம் உதவியளிக்கும்!

## அமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் இன்று அமைதியற்ற நிலையும் முரண்பாடும் அதிகரித்துள்ள நிலையில் இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாக இருப்பது வரவேற்கத்தக்கதாய் இருக்கும் அதே வேளை, நம்பிக்கை தருவதாகவும் அமைந்துள்ளது என பொதுநலவாய அமைப் பின் பொதுச் செயலாளர் டொன் மக்கினொன் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக அவர் இவ்வாறு கருத்துக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்றத்திற்காக உதவி வழங்கும் நாடுகள் உடனடியாக நிதி வழங்குவது பற்றிச் சிந்தித்து வருகின்றன. எனவே சம்பந்தப்பட்ட இருதரப்பும் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்ட வேண்டும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பொதுநலவாயம் - அரசியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் உதவக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளதாக - பொது நலவாய அமைப்பின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : ஸ்ரீ.தேனுஜன்
முகவரி : காளி கோவிலடி,
வட்டு.தெற்கு.





பெயர் : வி.சாயுகன்
முகவரி: ஓடக்கரை,
கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு: இம்மாத முடிவு வரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்







# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 09**

சார்லி தன் நடிப்பை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்ததால் குழுவில் மற்றவர்களுக்கு அவன் ஒரு கேள்விக்குறியாகவே இருந்தான். ஆனால், "ஸ்டான் லாரல்" என்ற அவன் கூட்டாளிக்கு மட்டும் சார்லியைப் பிடித்திருந்தது. இவர்தான் பின்னர் 'ஆலிவர் ஹார்டியுடன்' ஜோடி சேர்ந்து உலகின் தலை சிறந்த நகைச்சுவை இரட்டையர்களில் ஒருவராக விளங்கினார். சார்லி கூச்சமுடையவன் என்றும், தனது வேலையில் முழு ஈடுபாட்டுடன் இருப்பவன் என்றும் இவர் தெரிந்து கொண்டார். அவன் தமாஷாகவும் மற்ற நடிகர்களைப் போல் அன்பாகவும் கருணையுடையவனாக இருந்தாலும், அவனுக்கு வேலைதான் முக்கியம்.



1908 ஆம் ஆண்டு. சார்லிக்கு அப்போது வயது பத்தொன்பது. காதல் செய்யத் தொடங்கினான். அவனது காதலி ஹெட்டி கெல்லிக்கு அப்போது வயது பதினைந்துதான். பெற்றோர்கள் அதைத் தள்ளுபடி செய்து விட்டனர். ஆனால், அழகான 'ஹெட்டியின் நினைவுகள்' வாழ்நாள் முழுவதும் அவன் மனதில் இருந்தது.

ப்ரெட் கர்னோ முரடர், இரக்கமற்றவரும் கூட. ஆனால் அவருக்கு நகைச்சுவை நன்றாகப் புரிந்தது. கொஞ்சம் மனித உணர்வுகளை நகைச்சுவைச் சூழ்நிலையில் சேர்ப்பது மெருகூட்டும் என்று சார்லிக்குக் கற்றுக் கொடுத்தார். இதைச் சார்லி தன் திரைப்படங்களில் திரும்பத், திரும்பப் பிரயோகித்தார்.

1910 ஆம் ஆண்டு கர்னோ தன் வருடாந்தர அமெரிக்கச் சுற்றுப் பயணத்திற்கு கிளம்பியபோது, சார்லியும், அக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அமெரிக்கர்களிடையே அவர் மாபெரும் வரவேற்பைப் பெற்றார்.

அவர்களின் இருபத்தியொரு மாதச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியபோது, சிட்னிக்கு திருமணமாகியிருந்ததை அறிந்தார் சார்லி. அடுத்த அமெரிக்க சுற்றுப்பயணம் ஐந்து மாதங் களுக்குப் பிறகு தொடங்கியது. ஆனால் அது ஏற்பாடு செய்யப்பட்ட முறை சார்லிக்கு மிகுந்த அதிருப்தியைக் கொடுத்தது. இருந்தாலும் அது ஒரு வெற்றிப் பயணமாக அமைந்தது. சார்லிக்கு நல்ல புகழைத் தேடிக் கொடுத்தது. பிலடெல்பியா சென்றடைந்த பொழுது அவர்களுக்கு ஒரு தந்தி வந்தது.

அதில், "உங்கள் கம்பெனியில் சாப்ளின் என்றோ, அது போன்ற வேறு பெயரைக் கொண்டோ ஒரு நபர் இருக்கிறாரா? அப்படியென்றால் அவர் கெஸ்ஸல் மற்றும் பௌமேனைத் தொடர்பு கொள்க." என்றிருந்தது

சார்லி அந்த மர்ம மனிதர்களைக் காண ஆவலுடன் நியூயோர்க் சென்றார். அவர்கள் சார்லியின் நடிப்பைப் பார்த்திருக்கிறார்கள் என்ற விஷயம் அவருக்குத் திகைப்பாக இருந்தது. கீஸ்டோன் படக்கம்பெனியில், ஒரு நட்சத்திர நடிகருக்கு பதிலாக சார்லிக்கு வாய்ப்புத் தரப்பட்டது.

அது 1931 மே மாதம். சார்லியின் வாழ்க்கையே மாறுதலுக்கு உட்பட இருந்தது.

சார்லி பிறந்த வருடத்தில்தான் திரைப்படமும் கண்டு பிடிக்கப்பட்டது. முதலில், அசையும் படங்களைக் கண்டு மக்கள் வாய்பிளந்து நின்றார்கள். அதில் காட்டப்பட்ட சம்பவங்கள் ஒரு சில நொடிகளே நீடித்தன. ஆனால் 1913க்குள் திரைப்படம் பெரியளவு வியாபாரமாகிக் கொண்டிருந்தது. தேவையைப் பூர்த்தி செய்ய சின்னத் திரைப்படங்களைத் தயாரித்த கம்பெனிகளுள் 'கீஸ்டோனும்' ஒன்று. திரைப்படங்கள் வெறும் மாயை என்றும் நேரடி மேடைக்காட்சிகளுக்கு அது மாற்றாகாது என்றும் மக்கள் நம்பினர்.

தற்போது உள்ளது போல், அந்தக் காலத்தில் ஸ்டுடியோக்கள் அவ்வளவு விரிவானதாக இருக்க வில்லை. 'சாப்ளின் வாழ்க்கையும் கலையும்' என்ற அவருடைய வாழ்க்கை வரலாற்றில், டேவிட் ரொபின்ஸன் சார்லியின் தலைமையில் இயங்கிய ஸ்டுடியோவை பற்றிக் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்.

"நூற்றி ஐம்பது சதுரஅடிப் பகுதியை பச்சைநிறப் பலகை வேலி சூழ்ந்திருந்தது. அதன் நடுவே மேடை அமைக்கப்பட்டிருந்தது. சூரிய ஒளியைச் சிதறச் செய்வதற்காக அதன் மேலே வெள்ளை சினின் துணி மாட்டப்பட்டிருந்தது. ஒரு பழைய பங்களாவில் அலுவலகமும் பெண்களின் ஒப்பனை அறையும் இருந்தது. விவசாயத்திற்கு உபயோகப்பட்ட கட்டடங்கள் மாற்றி அமைக்கப்பட்டு ஆண்களின் ஒப்பனை அறைகளாகப் பயன்பட்டன."

இது தான் அன்றைய ஸ்டுடியோ! ஒலியே கிடையாது. சில காதல் படங்களில் நடிகர்களுக்கு சரியான மனநிலையை உருவாக்க சிறிய இசைக் குழு ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டது. கையினால் சுழலக்கூடிய கமராக்கள் குறிப்பிட்ட இடத்திலேயே வைக்கப்பட்டிருந்தன. கமரா, நடிகர்களுக்குக் கட்டுப்படுவதற்குப் பதிலாக, நடிகர்கள் கமராவுக்கு கட்டுப்பட்டார்கள்.


பூங்காவிலோ அல்லது ஸ்டுடியோவிற்கு வெளியே இருக்கும் தெருக்களிலோதான் பெரும்பாலும் படமெடுக்கப்பட்டது. ஸ்டுடியோ விளக்குகள் இல்லாத காரணத்தால் முதன் முதலில் எல்லாவற்றுக்கும் சூரிய ஒளியையே நம்பியிருக்கவேண்டியிருந்தது

கீஸ்டோன் கொடுத்த வாய்ப்பு சார்லியை மிகவும் பரவசமூட்டியது. ஆனால் அவர் இப்போது ஹொலிவுட்டில் இருந்தார். தான் எடுத்த முடிவு சரிதானா என்று அவருக்குள் சந்தேகம் எழுந்தது. என்னதான் இருந்தாலும் அவர் ஒரு மேடை நகைச்சுவை நடிகர்தானே? பல நாட்கள் ஸ்டுடியோவுக்குள் செல்வதற்கு தயக்கம் காட்டினார். அவர் உள்ளே செல்ல புதிய முதலாளி சென்னேட்டிடம் இருந்து தொலைபேசியில் அவசர அழைப்பு வரவேண்டி இருந்தது.

அங்கு நடந்தவற்றைக் கண்டு அவர் முழுவதும் கலங்கிப் போனார். அவருடைய நகைச்சுவை எப்போதுமே ஒத்திகைகளையும், கவனமாக செயல்பட வேண்டிய காலத்தையும், புத்திசாலித்தனமாக கணக்கிடப்பட்ட ஒளி, ஒலி அமைப்புக்களையும் நம்பித்தான் இருந்தது. ஆனால் கீஸ்டோன் அப்படிப்பட்ட நுணுக்கங்களை நம்பவில்லை.

உடல் அசைவுகளால் ஏற்படக்கூடிய நகைச்சுவைகளையும், பதற்றமான துரத்தல்களையும், கோணங்கித் தனமான ஒப்பனைகளையும் தான் கீஸ்டோன் நகைச்சுவைகள் முழுதும் நம்பியிருந்தன. ஆனால் சார்லி இதற்கெல்லாம் அஞ்சிப் பின்தங்குபவராக இல்லை. பல வாரங்களுக்கு அவருக்குப் பணி ஏதும் கொடுக்கப்படவில்லை. அந்தக் காலத்தை அவர் கண்டு கற்கப் பயன்படுத்திக் கொண்டார். இந்தப் புதிய வித்தையில் மிக நன்றாகத் தேர்ச்சி பெறுவதில் அவர் உறுதியாக இருந்தார்.அது அவருக்குப் பணத்தையும், புகழையும் கொடுக்கும் வாய்ப்பை அளித்தது.

(அடுத்த அரங்கில் தொடரும்)




1868 இல் கொழும்பு- கோட்டை ரயில் நிலையம் இப்படித்தான் இருந்தது. இப்போது எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா?


# விண்வெளியில் ஆய்வுகூடங்கள்

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாகிய 'நாஸா', விண்வெளியில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை அமைத்து, வர்த்தக ரீதியாக, நிதியைத் திரட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

விண்வெளியில் ஆய்வு நிறுவனத்தினை நிறுவி வர்த்தக ரீதியிலும், விஞ்ஞான ஆய்வுகளை விரு



த்தி செய்தும் தன்னை மேம்படுத்த நாஸா நிறுவனம் முயற்சிக்கின்றது. புதிய மருந்து வகைகள், புவியியல் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய புதிய பொருட்களை, பூமியில் கண்டு பிடிக்கமுடியாத ஆய்வுகளை விண்வெளியில் மேற்கொள்ள நாஸா திட்டமிடுகின்றது.



தற்பொழுது நாஸா விண்வெளியில் புதிய ஆராய்ச்சிப் பூங்காவை ஸ்தாபித்துள்ளது. புளோரிடா மாநிலத்தில் இருந்து பல ரொக்கட்டுக்கள் வியாபார முதலீடுகளுக்காக விண்வெளியில் ஏவப்படுகின்றன.

அமெரிக்கா தனித்து இந்த விண்வெளி ஆய்வில் ஈடுபடவில்லை. ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் தமது முதலீடுகளை விண்வெளி ஆய்வில் முதலிட்டுள்ளன. வர்த்தக விஞ்ஞான ஆய்வுகளுக்காக தமது முதலீடுகளையும் அவர்கள் சேர்த்துக் கொள்கின்றார்கள்.

அமெரிக்க மாநிலமான புளோரிடாவில் சர்வதேச வர்த்தக, விண்வெளி ஆராய்ச்சி மையம் அடுத்த வருடம் தோற்றம் பெறவுள்ளது.

எதிர்காலத்தில் விண்வெளியில் வர்த்தகம் என்பது கனவாக அல்லாமல் நிஜமாகவே மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மிக மலிவான விலைகளில் மருந்துக்கள் மற்றும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் பூமியின் புதிய கைத்தொழிலுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுத்தரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# வெடித்துச் சிதறிய விண்வெளி ஓடம்

விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான பயணங்களை மேற் கொண்டு வந்த விண்வெளி ஓடம் ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது. அமெரிக்காவின் புளோரிடா மாநிலத் தில் நிகழ்ந்த இந்த வெடிப்புக்கு ஒட்சிசன் வாயுக் கசிவே காரணம் எனக் கூறப்ப



உயிர் தப்பிய விமானி

டுகின்றது. இந்த விண்வெளி ஓடம் பயண த்திற்கு தயாராக ~1.9 மில்லியன் லீற்றர் எரிபொருளுடன் தயாராக இருந்தது.

திடீரென ஏற்பட்ட வெடிப்பினால் அந்த ஓடம் முற்றாக நாசமாகியது. விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு செல்வதற்கு அமெரிக்கா இந்த விண்வெளி ஓடத்தை தயார்படுத்தி வந்தது.

அமெரிக்காவின் முதலாவது விண்வெளிப் பயணியை அனுப்பியது முதல் இவ் ஓடம் ஏழு விண்வெளிவீரர்களை கொண்டு சென்றிருக்கிறது.


1950 முதல் புளோரிடாவில் இயங்கிவரும் விண்வெளித்தளத்திலேயே இவ் விபத்து ஏற்பட்டது. இங்கிருந்து அடுத்த நான்கு மாதகாலத்துக்குள் மூன்று விண்வெளி வீரர்களை சர்வதேச நிலையத்திற்கு கொண்டு செல்லவும் அங்கிருந்து நான்கு பேரைப் பூமிக்கு கொண்டு வரவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இப்போதைய கால நிலை விண் வெளிப்பயணத்தி ற்கு உகந்ததாகக் கருதும் விண் வெளி வீரர்களுக்கு இந்த விபத்துச் சம்பவம் ஏமாற றத் தைக் கொடுத்து விட் டது.

இவ் விண்வெளி ஓடம் கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்டு நேற்று விண்வெளி நிலையத்தைச் சென்றடையும் என எதிர்பாக் கப்பட்டிருந்தது. ஆனால் விண்வெளி வீரர் ஒருவரின் ஹெல்மட்டில் ஒட்சிசன் கசிவு ஏற்பட்டதால் இது வெடித்துச் சிதறிவிட்டது.

# ஆளுக்கேற்ற செயற்கைப் பற்கள்

பல் மருத்துவர்களும் பல் நோய்களால் அவதிப்படுபவர்களும் இனிமேல் நிம்மதிப் பெருமூச்சு விடலாம். இதுவரை பெரும் தொல்லையாக இருந்த பிரச்சினை ஒன்றிற்கு இப்போது தீர்வு கண்டு பிடித்து விட்டார்கள். எப்படி?



ஒருவருக்கு ஒரு பல்லையோ அல்லது அதிகமான பற்களையோ மாற்ற வேண்டி இருக்கிறது என்றால், செயற்கைப் பற்களைத்தான் கட்டவேண்டும்.

இதில் சங்கடப்பட வைக்கும் விஷயம் என்னவென்றால், இயற்கையாக இருக்கும் பல்லுக்கும் செயற்கைப் பல்லுக்கும் உள்ள நிறம் வேறுபடும். அப்படியே நூற்றுக்கு நூறு இயற்கையான பல்லைப்போல் நிறம் அமையாது.

இதற்கு என்ன செய்கிறார்கள் என்றால், வேறு தொழில்களில் பயன்படுத்தப்பட்டு வரும் கருவிகளையும், தொழில் நுட்பங்களையும் கடன் வாங்கி பயன்படுத்திக் கொண்டு இருந்தார்கள். சொன்னால் நம்பமாட்டீர்கள்,

பெயின்ட் தயாரிப்பவர்கள்- விதவிதமான துணிகளை உற்பத்தி செய்கிறவர்கள் எப்படி வெவ்வேறு நிறங்களைப் புகுத்தலாம் என்பதற்கு ஸ்பெக்ட்ரோ மீட்டர், கலரி மீட்டர் என்றெல்லாம் வைத்துக் கொண்டு இருப்பார்கள். இந்தத் தொழில்நுட்பத்தைத்தான் இவ்வளவு காலமும் செயற்கைப்பல் தயாரிப்பவர்கள் கடன் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். இப்போது புதியமுறை வந்துவிட்டது.


புதிய கருவி உருவாக்குவதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் இதற்குப் பொருத்தமான நிறுவனத்தைப் பிடித்தார்கள். ஒலிம்பஸ் என்ற பெயரில் கமராக்களைத் தயாரிக்கிறார்கள் இல்லையா? அவர்கள்தான், புதிய கருவியை கண்டுபிடித்தார்கள்.

முதலில் இந்தச் சிறப்புச் சாதனத்தைக் கொண்டு பற்கோளாறு உள்ளவரின் வாயைப் படம்பிடித்துக் கொள்கிறார்கள். இந்தப் படத்தை இன்டர்நெட் வழியாக பரிசோதனைச் சாலைக்கு அனுப்புகிறார்கள்.

அங்குள்ள கம்ப்யூட்டர் இந்தப் பல்லுக்கு எந்த நிறம் பொருந்தும் என்பதை ஆராய்கிறது. ஆயிரக்கணக்கான வண்ணச் சேர்க்கைகளைப் பயன்படுத்திப் பொருத்தமான வண்ணத்தைத் தேர்வு செய்கிறது.

இந்த வண்ணத்தில் தயாரியுங்கள் என்று அதற்கான விவரங்களைச் சொல்லி விடுகிறது. அவ்வளவுதான். அதன்படி தயாரித்துப் பொருத்திவிட்டால் அசல் பல்லுக்கும் போலிப பல்லுக்கும் அணுவளவு கூட நிற வித்தியாசம் தெரியாது.

இந்த முறையை மருத்துவ அடிப்படையில் சோதித்துப் பார்த்துவிட்டார்கள். எல்லாம் திருப்திகரமாக இருக்கிறது. பயிற்சி பெற்ற பல் மருத்துவர்கள் இந்த முறையைப் பயனபடுத்துவது எளிது என்பதோடு மிகவும் முன்னேறிய முறையாகவும் இருப்பதால் பெரும் வரவேற்பைப் பெறும் என்கிறார்கள்.



இது என்ன தென்கிழக்காசியச் சிறு துறைமுகம் எனக் கருதுகிறீர்களா? இல்லை. நாட்டின் இரண்டாவது பெரிய துறைமுகமாக இன்று விளங்கும் காலித துறைமுகத்தின் 1872 ஆம் ஆண்டுத் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

# கடற்கீரி





கடல் பிரதேசங்களில் வாழும் ஒரு வகை கடற்கீரியான ஒட்டர் (Olter) மிகவும் சிறு பிள்ளைத்தனமாக கடல் விளையாட்டுக்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒரு கடல் விலங்காகும்.

ஒட்டர் வகை விலங்குகள் பத்து வருடங்கள் வரை ஆயுள் காலத்தைக் கொண்டவை. பொதுவாக இதன் தலை முதல் உடல்வரை 55 செ.மீ முதல் 110 செ.மீ வரை நீளம் கொண்டது. இதன் உடல் நிறை 5 கி.கி இருந்து 12 கி.கி வரையானது.

மிகவும் நீண்ட மீசையினைக் கொண்ட விலங்கான ஒட்டர் மெல்லியதான உடல்வாகைக் கொண்டது.




ஆழ் கடலுக்கு ஒட்டர் செல்லும்போது தனது காதுகளையும் மூக்குகளையும் நன்கு மூடிக்கொள்ளும்.

பொதுவாக தூய நீரினை நாடி இந்த ஒட்டர்கள் தேடிச் செல்வது வழமை. கடல் மீன்களையும், மற்றும் தவளைகள் கடற்பறவைகளை இவை உணவாக உட்கொள்ளும்.

# கணவன் —மனைவி உறவில்

## அடிக்கடி தோன்றும் விரிசல்கள்



கணவன், மனைவி உறவு முறிவதற்கு பிரதான காரணம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தைப் பற்றி அல்லது நிகழ்ச்சியைப் பற்றி தான் கண்டு விளங்கிக் கொண்ட காட்சிதான் சரியென்று எணணுவதாகும். அந்த நிகழ்ச்சியை ஒவ்வொருவரும் தான் காணும் விதத்திலேயே மற்றவரும் காண வேண்டும் என்று எண்ணுவதாகும். நான் காண்பதை தவிர வேறுவிதத்தில் காணமுடியாது என்று எண்ணுவதாகும். தன்னுடன் ஒத்துவராத எல்லோரும் உண்மையைக் காணாத, உண்மையை ஏற்றுக் கொள்ளாத மூடர்களென்று எண்ணுவதாகும்.

தனது கணவன் அல்லது மனைவி தான் கண்டு விளங்கிக் கொண்டதை, அதே விதத்தில் கண்டு விளங்கிக் கொள்ளாததால் அவர்கள் பிழை என்று நினைப்பது சரியாகுமா? அப்படி நினைப்பது அறிவற்ற எண்ணமாகும். இப்படி எண்ணும்போது கட்டாயம் கணவன் மனைவி உறவுக்கு தடையாகின்றது.

(உ-ம்) காரியாலயத்தில் வேலை செய்கின்ற இருவர் வேலை என்பதை நோக்கும் விதம் வேறுபட்டதாக இருக்கலாம். கடமையுணர்ச்சியுடன் வேலை செய்பவர் வேலையை மகிழ்வுடனும் விருப்பத்துடனும் செய்வார். வேலையில் அக்கறை இல்லாதவர் எந்நேரமும் வேலை கஷ்டமானதென்று கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார். இங்கு வேலை என்பதை இருவரும் ஒரே விதத்தில் நோக்கவில்லை என்பது புரிகின்றது.

நாம் ஒரு நிகழ்ச்சியை நோக்கும்பொழுது எமக்குப் பழக்கப்பட்ட விதத்திலேயே நோக்குகிறோம். ஈர்க்கப்பட்ட விதத்தில் நாம் அதைக் கண்டு விளங்கிக் கொள்கிறோம். எமது சமயம், கலாசாரம், சமுதாயப் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, எமது கல்வி நிலை மட்டம், எமது சமுதாய பொருளாதார மட்டம், எமது குடும்பத்திலிருந்து நாம் பெற்ற நம்பிக்கை, விசுவாசம், பயம், எண்ணம் பெறுமதிகள், எமது கண்ணோட்டம் போன்ற காரணங்களை மனதின் பின்னணியில் வைத்துக் கொண்டே அந்த நிகழ்ச்சியை நோக்குகிறோம். அப்போது இப் பின்னணி களின் தாக்கத்துடனேயே நிகழ்ச்சியைப் புரிந்து கொள்கிறோம்.

ஒரு மேசையைப் பார்த்து ஒருவர் வாசிக்கவும் அதில் எழுதப் பயன்படுத்தும்போதும் மேசை என்கிறார். ஆனால் மழை நேரத்திலே வெளியில் விளையாட முடியாத பிள்ளை வீட்டுக்குள் ஓடிவந்து, மேசையைச் சுற்றி சேலை கட்டி அதை வீடாக நினைத்து விளையாடும். அதை வீடு என்று சிறுபிள்ளை கூறும். பெரியவர்கள் மேசை என்பதைச் சிறுபிள்ளை வடு என கிறது. இங்கு பாவிப்பதைக் கொண்டுதான் மேசையா? வீடா? என எண்ணப்படுகிறது.

ஒவ்வொருவரும் தத்தமது கலாசாரப்பின்னணி, தனிப்பட்டபின்னணியின்படி நிகழ்ச்சியில் பல அர்த்தத்தைக் காண்பர்.

இவ்வாறுதான் கணவன் மனைவி என்ற ஆழமான உறவினுள் இருவரும் ஒன்றை ஒரே விதத்தில் காண்பதில்லை. கணவன் தனது மனைவியுடன் ஒத்துப்போக முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இந்த ஒத்துக்கொள்ள முடியாத நிலையால் இருவருக்கிடையிலும் ஏற்படும் உறவை உடைக்க இடமளித்தல் முறையாகுமா?

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் ஒருநாள் வீட்டினுள கதைத்துக் கொண்டிருந்தனர். அந்த நேரம சடுதியாக அவ்விடத்திற்கு ஒரு எலி ஓடிவந்தது. ஓடி வந்த எலி சடுதியாக ஓடி மறைந்து விட்டது. "அந்தக் கதவாலேயே அந்த எலி ஓடியது" என்று கணவன் பேச்சோடு பேச்சாக மனைவிக்குக் கூறினார். அதை மனைவி ஏற்கவில்லை. இந்தக் கதவால் அந்த எலி ஓடவில்லை அந்தக் கதவாலேயே ஓடியது" என்றாள் மனைவி. தான் கூறியதை புறக்கணித்ததால் கடும் கோபம் கொண்ட கணவன் "நான் மனதிலே வந்ததைச் சொல்லவில்லை. கண்ணாலே கண்டதைத்தான் சொன்னேன்" என்றார். "நானும் எனது கண்ணாலே கண்டதைத்தான் சொன்னேன்" என்றாள் மனைவி. இருவரும் தம்மை அறியாமலே கோபத்துடன் சத்தம் போட்டனர். அது முற்றி சண்டையாக வெடித்தது. இருவரும் பிரிந்து விட்டனர். நண்பர் ஒருவரின் முயற்சியால் இருவரும் திரும்பவும் வீட்டுக்கு வந்தனர். வந்து மௌனமாக இருந்தனர். சிறுநேரம் இருவருமே ஒருவருடன் ஒருவர் கதைக்கவில்லை. பின்பு கணவன் மனைவியுடன் கதைக்க ஆரம்பித்தார். மனைவி திரும்பவும் "நான் எப்படி அதை ஏற்றுக்கொள்வது, இந்தப் பக்கத்தாலே எலி ஓடியதை நான் பார்த்தேன்" என்றாள. இருவருக்குமிடையில திரும்பவும் சண்டை ஏற்பட்டுவிட்டது. இங்கே இருவரும் தான் கணடதுதான் சரி என்று நினைத்து வாதாடியதால் பிரச்சினை ஏற்பட்டது எனலாம்.

கணவன் மனைவி இருவரும் முகமூடி போடாது வாழவேண்டும்.

சிறுபிள்ளைகள் பொய்யான வாழ்வைப் பெற்றோர், பெரியவரிலிருந்து கற்றுக்கொள்வர். மூன்று வயது வரை உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்தப்பார்ப்பர். ஆனால் அதன் பின் பெற்றோர் பெரியவரிடம் இருந்து பொய் சொல்ல, மறைக்கக் கற்றுக்கொள்வர்.

ஒருநாள் கணவனும் மனைவியும் சுகவனமாக இருந்த உறிவினர் ஒருவரைப் பார்க்கத் தமது பிள்ளை யையும் கூட்டிக்கொண்டு சென்றனர். அங்கே சிறுபிள்ளை, நோயாளியான மாமாவைப் பார்த்து "மாமா, எனது அப்பா எங்களுடைய வீட்டிலே இருந்த செவ்விளநீர் மரத்திலே பிடு ங்கிய செவ்விள னியிலே பெரி யவைகள் எல்லா வற்றையும் வீட் டிலே வைத்து விட் டுச் சிறிய செவ்விளநீர்தான் மாமாவுக்குக் கொண்டு வந்தார்" என்றாள். அந்த நேரம் ஒன்றுமே பேசாமல் இருந்த தந்தை வீட்டுக்கு வந்ததும் பிள்ளைக்கு அடித்தார். அன்றிலிருந்து பிள்ளை பொய் சொல்லப்பழகியது. அடு த்த நாள் வீட்டுக்கு இருவர் காசு சேர்ப்பதற்கு வருவ தைத் தாய் கண்டுவிட்டு மகனிடம் சென்று "மகன் வெளியில் நிற்கின்ற மாமாமாருக்குச் சொல்லுங்கள் வீட்டிலே அம்மா இல்லையென்று" என்று கூறினாள். பிள்ளை வெளியில் சென்று வந்தவர்களிடம் "அம்மா தான் வீட்டில இல்லையென்று சொல்லச் சொன்னா" என்றாள். வந்தவர்கள் சென்றதும் தாய் பிள்ளைக்கு அடி த்ததால் அன்றும் பொய் சொல்லக் கற்றுக்கொண்டது. இப்படிப் படிப்படியாகப் பொய் வாழ்வு வாழப் பழகியது பெற்றோர், பெரியோர் மூலமாகவேயாகும்.

விவாக வாழ்வில் கணவன் கணவனாகவும் மனைவி மனைவியாகவும் இருக்க இடமளிக்க வேண்டும். இருவருக்குமிடையில் இடைவெளி தேவை.

மற்றவர் இருக்கும் நிலையிலிருந்து அவரை மாற்றி அன்பு செய்வதைவிட, அவர் இருக்கும் நிலையில் அவரை ஏற்று அன்பு செய்யவேண்டும். இங்கே ஒருவர் கூறும் பிழையை மற்றவர் சரியென்று ஏற்க வேண்டும் என்பது அர்த்தமல்ல.

இருவரும் ஒரே சரீரமாக இருக்கவேண்டுமென ஒருவர் மற்றவரை மாற்ற முயல்வது பிழை. இருவருக்கிடையில் மாற முடியாதவைகள் பல உள்ளன. ஆகவே "நீ, நீயாக இரு. உன்னை நான் அன்பு செய்கிறேன்." என்ற விதத்தில் மற்றவரை மாற்ற முயலாது, இருக்கும் நிலையில் ஏற்று அன்பு செய்தல் வேண்டும். தவறுகளை அன்போடு சுட்டிக்காட்ட வேண்டும்.

எஸ்.ஜே.யோகராசா

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

சொல்லும் செயலும் உறுதியானால்
உலகமே உனக்கு நண்பனாகும்.

*- ஆதர் வில்சன்.*

## நமது நோக்கு

## இரவும் ஒளிதரும் தேசத்திலிருந்து தளராத நம்பிக்கைக் கீற்றுகள்!

ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு - எதிர்பார்த்ததைப் போலவே குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடனும் சமாதானத்தின் மீதான உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் இன்னமும் வலுவாக்குவதாகவும் அமைந்துள்ளது.

ஒஸ்லோ மாநாடு இரண்டு வழிகளில், முக்கியமான இலக்குகளைச் சாதித்திருக்கின்றது.

ஒன்று - அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உயர்மட்டத்திலான சந்திப்பொன்று இடம்பெற்றமை.

மற்றையது - அமைதிக்கானதும், அதன் வழியே அபிவிருத்திக்கானதுமான தமது அர்ப்பணிப்பை, அரசாங்கம் - விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருமே சர்வதேசத்திற்கு ஒன்றிணைந்து, ஒரே குரலில் எடுத்துச் சொன்னமையாகும்.

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரையில் - நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்றுவந்த சந்திப்புக்களில் - இதன் முக்கியத்துவம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகின்றது.

அமைதி முயற்சிகள் ஒரு கட்டத்திற்கு நகர்ந்த பின்னர் - அவற்றின் உறுதிப்பாடுகள் பற்றிய சந்தேகங்கள் களைந்த பின்னர், நடைபெற்றுள்ள இச்சந்திப்பு - இனிவரும் சமாதானப் பேச்சுக்களுக்கு புதியதொரு உத்வேகத்தையும், நம்பிக்கையையும் தருவதாக அமைந்திருக்கின்றது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான எதிர்கால உயர்மட்ட நேரடிப் பேச்சுக்களுக்கு - பரிச்சயமான, நட்பார்ந்த சூழலொன்றைத் தோற்றுவிக்கவும் இச்சந்திப்பு துணைபுரிவதாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற, குறிப்பாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பேற்றதும் நடைபெற்ற பேச்சுகளோடு ஒப்பிடும்போது - புதியதொரு பரிமாணத்தினூடாக, தற்போதைய பேச்சுகள் நகர்வதை அவதானிக்க முடியும்.

அதாவது, பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுகளும், முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களில் ஏற்பட்ட தாமதங்களும் ஏற்படுத்திய சலிப்பையும், தோல்வியையும் தவிர்க்கும் வகையில் - தற்போதைய பேச்சுகள் அமைவதை முக்கியமாக நோக்க முடியும்.

பிராந்திய ரீதியாகவும், விவகாரங்கள் தொடர்பானதாகவும், உச்சநிலைப் பேச்சுக்கள் வழியாகவும், பல மட்டங்களின் பங்களிப்புடனும் தொடரும் தற்போதைய பேச்சுகள் - பல வழிகளிலும் முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டிருப்பனவாகும்.

பிரச்சினைகளையும், விவாதங்களையும், முரண்பாடுகளையும் அந்தந்த மட்டங்களிலேயே தீர்த்துக் கொள்வதன் மூலம், அவை தீவிரம் பெறுவதையும், அதனால் சமாதான முயற்சிகள் பாதிப்படைவதையும் தடுக்கக்கூடியதாகவும் -

அனைத்துத் தரப்பினதும் பங்காற்றுதல் மூலம் பல்வேறு பரிமாணங்களிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துக்கொள்ளக்கூடியதாகவும் -

அமைதிக்கான பொறுப்பை சகல மட்டங்களிலும் வலியுறுத்தச் செய்யும் வகையிலும் - அமைகின்ற புதிய சமாதான முயற்சிகளில் - உச்சநிலைச் சந்திப்புக்கள் என்ற புதிய கட்டத்திற்கு நகர்வதற்கு - தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட முதற்காலடி - ஒஸ்லோவினூடாக அடுத்த படிகளுக்குச் செல்கின்றது என்றே கொள்ள முடியும்.

ஒஸ்லோ மாநாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்ட இரண்டாவது இலக்கான - சர்வதேசத்திற்கான அமைதிக்கான உரத்த குரலும், ஒத்துழைப்பும் - போரினால் சிதைந்துபோன இலங்கைத் தீவின் புனரமைப்புக்கும், புத்தாக்கத்திற்கும் - உலகின் கவனத்தைச் சரிவரக் கவர்ந்து, வெற்றியைத் தந்திருக்கின்றது.

ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் எண்ணிக்கையும், உயர்மட்ட ஆதரவும் - போரில் ஈடுபட்ட இரு தரப்பினரதும் கோரிக்கைகளுக்கு சர்வதேசம் அங்கீகாரத்துடன் செவிசாய்த்திருப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த வகையில் - ஒஸ்லோ மாநாடு, தனது இலக்குகளை எட்டிவிட்டதாகவே கருதமுடியும்.

ஒஸ்லோ மாநாட்டில் ஒலித்த, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தினதும் உரைகளும், கருத்துக்களும் - சமாதானத்திற்கான அதியுயர் பங்கேற்பையும், அப்பழுக்கற்ற விசுவாசத்தையும் உலகின் எட்டுத் திக்குகளுக்கும் கொண்டு சென்றிருக்கின்றன என்றால் அது மிகையல்ல என்றே கூறலாம்.

### ரணில் - பாலா சந்திப்பில்

# கிழக்குப் பகுதி நிலவரம், நிதியுதவி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது

(ஒஸ்லோ)

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின் முடிவில் - கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கலாநிதி அன்ரன் பாலசிங்கம், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர்- தாம் நடத்திய பேச்சுகள் பயனுள்ளதாக அமைந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

இச்சந்திப்புக்கள் காலத்துக்குக் காலம், அடிக்கடி இடம்பெற வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிததுள்ளார்.

பேச்சுக்களின் பின்னர் கருத்து வெளியிட்ட விதார் ஹெல்கிசன் - ஆக்கபூர்வமானதாகவும், சுமுகமான சூழலிலும் பேச்சுக்கள் இடம்பெற்றதாக தெரிவித்ததுடன் - கிழக்குப் பகுதியின் பாதுகாப்பு நிலைவரம், இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிப் பணிகள், நிதியுதவிகள் குறித்தும் ஆராயப்பட்டதாகவும் - ஆசியாவின் மிக நீண்ட இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சியில் இச்சந்திப்பு குறிப்பிடத்தக்கதொரு மைல்கல் என்றும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்துத் தகவல் வெளியிட்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம், இனிவரும் காலங்களில் சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பது குறித்து, இருதரப்பும் யோசனைகளைப் பரிமாறிக் கொண்டதாகத் தெரிவித்தார்.

மேலும், கிழக்குப் பகுதியிலுள்ள நிலைமை குறித்துப் பேசப்பட்டபோது - சில சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், ஆனால் இவ்விடயம் தொடர்பாக, புலிகளின் கிழக்குப் பகுதி தளபதியான கேணல் கருணாவும், கிழக்குப்பகுதி இராணுவ அதிகாரிகளும் சந்தித்து, இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதென இரு தரப்பும் இணங்கிக் கொண்டதாகவும் மேலும் தெரிவித்தார்.

### க.பொ.த (சா/த) பரீட்சையில்

## சிறைக்கைதிகள், கண்பார்வையற்றோருக்கு விசேடமான பரீட்சை நிலையங்கள் அமைப்பு

(கொழும்பு நிருபர்)

க.பொ.த(சா/த) பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு நாடுமுழுவதிலும் இருந்து 5 இலட்சத்து 43 ஆயிரத்து 876 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களில் 3 இலட்சத்து 83 ஆயிரத்து 15 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்பதும், ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 52 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைகள் 3894 பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இவற்றுள் சிறைக் கைதிகளுக்கான பரீட்சை நிலையம் ஒன்றும் - பார்வையற்றோருக்கான இரண்டு பரீட்சை நிலையங்களும் அடங்குகின்றன.

களுத்துறைச் சிறையில் அமைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கான பரீட்சை நிலையத்தில் 753 சிறைக் கைதிகளும், இரத்மலானை மற்றும் தங்கல்ல ஆகிய இடங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 3560 பார்வையற்றோரும் பரீட்சை எழுதவுள்ளனர் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக தலைவர் மீது மோசடிக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் செய்துகொள்ளப்பட்ட 17 கோடி ரூபா உடன்பாட்டில் இடைத்தரகர் ஒருவரை நியமித்து, 15 சதவீத தரகுப்பணம் கொடுத்ததாகவும், கட்டுநாயக்காவில் 44 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தங்கு விடுதி அமைப்பதிலும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அத்துடன் சமீபத்தில் 16 லட்சம் ரூபா செலவில் 21 கணினிகள் கொள்வனவு செய்யப்பட்ட விவகாரத்தில் - கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும், கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பணியகத்தின் பணத்திலிருந்து 1000 டொலர் பெறுமதியான கடன் அட்டையை இவர் பெற்றுள்ளதாகவும், 30 லட்சம் ரூபா செலவில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

## அடுத்த சுற்று சமாதானப் பேச்சுகள் டிசம்பர் 2 இல் ஒஸ்லோவில் ஆரம்பம்!

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஒஸ்லோவில் எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் புலிகள் தரப்புக்கும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அரச தரப்புக் குழுவுக்கும் தலைமை தாங்கவுள்ளனர். நோர்வேயின் சார்பில் இம்முறையும் விதார் ஹெல்கிசனே ஏற்பாட்டாளர் குழுவுக்குத் தலைமை தாங்குவார்.

இந்தப் பேச்சுக்கள் ஒஸ்லோவில் உள்ள 'ரடிசன் சாஸ் பிளாசா' ஹோட்டலில் நடைபெறும்.

மாநாடு தொடங்க முன்னர் முதலாம் திகதி அரச, புலிகள் தரப்புக் குழுவினர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துவர் எனவும் - பேச்சுக்கள் முடிவுற்றதும் 5 ஆம் திகதியும் மற்றொரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்படும் என்றும் தெரியவருகின்றது.

4 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரோக்கியோ நிதியுதவி மாநாடு; ஜப்பான் அரசு ஆயத்தமாகிறது!

(ரோக்கியோ)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்த ஏற்பாடுகளின் ஒரு கட்டமாக முன்னாள் ஐ.நா.செயலாளரும், ஜப்பானின் விசேட தூதுவருமான யசுகி அகாஷி, ஒஸ்லோவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அடுத்த கட்டமாக - பாரிய நிதியுதவிகளைக் கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக, ரோக்கியோ மாநாடு நடத்தப்படவுள்ளது. இம்மாநாட்டுக்காக, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஜப்பானிய அரசாங்கம் உத்தியோகபூர்வமான அழைப்பினை விடுக்கவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

ஜப்பானின் இந்த நிதியுதவி மாநாட்டுக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் யூகியோ டகுச்சியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது, அமெரிக்கப் பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ், அமெரிக்காவினது ஆதரவைத் தெரிவிததுள்ளார். அத்துடன் ஜப்பான் மேலும் அதிகமான பங்களிப்பைச செய்ய முன்வர வேண்டும் என்றும் ஆர்மிரேஜ் கேட்டுள்ளார்.

## சந்திரிகா—ரணில் பிரச்சினைகளுக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் தேவை!

### வாஜ்பாயிடம் கோருகிறார் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)



ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உறவு நிலை விரிசலைச் சீராக்க இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் எனவும் -

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், சந்திரிகா, ரணில் ஆகியோருககிடையில் நடைபெறக்கூடிய கலந்துரையாடலே இந்தக் கசப்புணர்வுக்கு முடிவு கட்டும் எனவும் அமைச்சர் ஹக்கீம் கருத்து வெளியிட்டுள்ளார்.

சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் உறவுநிலை மோசமடைந்திருப்பதாகவும் - இந்நிலை தெற்காசியாவின் அரசியல் சூழல், தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்பவற்றைப் பாதிப்பதாக அமையும் என்றும், எனவே மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் சந்திரிகா - ரணில் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் - இந்தக் தலையீடு நட்புறவு சார்ந்ததாக, உத்தியோகப் பற்றற்றதாக அமையலாம் என்றும் தெரிவித்துள்ள அவர்,

இந்தப் பிரசச்னைக்கு முடிவு காணப்படுவது அவசியம். புது டெல்கியின் தலையீடு அவசியமாகிறது எனவும் கூறியுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்திய விஜயத்தின்போது, தற்போதைய பேச்சுகள் மற்றும் வட-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினை என்பன குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, மற்றும் கன்வல் சிபால் ஆகியோரை சந்தித்துப் பேசியுள்ளார்.

# எமக்கு அமைதி வாழ்வைத் தாருங்கள்!

# ரணிலுக்கு நெடுந்தீவு மாணவர் கடிதம்!!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினரால் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழ லுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அமைதி யான வாழ்வை தரவும், கல்வி சார் நடவடிக்கைகளை மீளமைக்க உத வுமாறும் கோரி நெடுந்தீவு மாணவர் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது -

கடந்த 16ஆம் திகதி தொடக்கம் இன்றுவரை நெடுந்தீவு பிரதேசத் தில் பயங்கரமான பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பாடசாலைகள், கல்வி நிலையங் கள் யாவும் செயலிழந்து போனது டன் கல்விசார் நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு எமது எதிகாலம் கேள்விக்குறி ஆகி யமையினை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இலங்கைத்தீவின் ஒதுக்குப் புறமான எமது பிரதேசம் மிகவும் பின்தங்கி இருக்கின்றது. கடந்த கால அரசியல் கலவரங்களை சாத கமாக்கிக் கொண்ட ஈ.பி.டி.பி (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி) பல வேறு வன்செயல்களையும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சித்திர வதை என்பவற்றை மேற்கொண்டு வந்தது. இதற்கு மேற்கொள்ளப் பட்ட பொலிஸ் முறைப்பாடுகள் எண்ணற்றவை, அவர்களின் அரசி யல் செல்வாக்கு காரணமாக அவை பயனற்றுப் போனது. சில முறைப பாடுகள் இன்றும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் எமது மாணவனின் தநதை ஒருவரையும் இக்குழு அடித் தும்,வெட்டியும் கொலை செய்ய முற்பட்டபோது ஊரவர்களின் உதவி யுடன் அவர் காப்பாற்றப்பட்டதுடன், ஈ.பி.டி.பியினின் பயன்படுத்திய சில வகை வெடிகுண்டுகள், ஆயுத உதி ரிபாகங்கள், ரவைகள் மக்களால் மீட்கப்பட்டு போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினரிடம் ஒப்படைக் கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்டு கின்றோம். அத்துடன் இக்குழு நெடு தீவிலிருந்து அன்றைய தினமே வெளியேற்றப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி அன்று இரவு வேளையில் இவ்வமைப்பினர் ஊருக்குள் புகுந்து பிரதேச சபை ஊழியரை தாக்கியதுடன் கதவு களை உடைத்து வாகனங்கள் இதர பொருட்களையும் சூறையாடி, ஊர் மக்களுக்கு பயங்கர அச்சுறுத் தலையும் செய்துள்ளனர். முப்படை பாதுகாப்புடன் இருக்கும் இவர்கள் முப்படையினரையையும் எமக்கெ திராக வன்செயல்களில் ஈடுபடுத்து கின்றனர். இத்தகைய தாக்குதல் களால் மூவர் காயமுற்றதுடன் பலர் தாக்கப்பட்டும் உள்ளனர். இதற்கு எதிர்ப்புக் காட்டி வருவதனால் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந் துள்ளன. மேற்படி கலவரங்களை கட்டுப்படுத்தி எமது இயல்பு வாழ்க் கையை மீட்டுத்தருமாறு தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். வறுமைக் கோட் டின் கீழ் வாழும் ஏழை மாணவர் களில், ஆயிரக்கணக்கானோரின் நலன்களில் அக்கறை கொண்டு ஈ.பி.டி.பியினரை வெளியேற்றி- வரப் போகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையினை எதிர்கொள்வதற்கு, நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்ட உயர்ந்த மனிதர் என்ற வகையில் தங்களைப் பணிவன்புடன கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் கல்வி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், யாழ். அரச அதிபர், பொலிஸ்மா அதிபர், தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர், தீவக கல்விப் பணிப் பாளர், உதவி அரச அதிபர், நெடுந் தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர், தமிழீழ தேசிய மாணவர் பேரவை, போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு ஆகியோருக்கும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. (லி)

# நெடுந்தீவுக்கு மூன்று தொலைபேசி இணைப்புகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களின் தொலைத் தொடர்பு வசதிக்காக மூன்று புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

வெளியுலகுடன் போதிய தொடர்பு கள் இன்றி தமது வாழ்வைத் தொடா கின்ற நெடுந்தீவு மக்களின் வசதி கருதி விசேட ரேடியோ தொலை பேசி இணைப்புக்கள் மூன்று வழங்கப் படவுள்ளன. இணைப்பு நடவடிக் கைளை மேற்கொள்வதற்கு யாழ். ரெலிகொம் அதிகாரிகள் குழு வொன்று நெடுந்தீவுக்கு பயண மாகவுள்ளது. (க,லி)

### பருத்தித்துறை - நெல்லியடி வீதியில்

# கற்குவியல், குழிகளால் வீதிப்போக்குவரத்து பாதிப்பு!

(நெல்லியடி)

நெல்லியடி - பருத்தித்துறை பிர தான வீதியின் புனரமைப்புக்காக பறிக்கப்பட்ட கற்குவியல்களும், தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்துவதற்காக "ரெலிகொம்" நிறுவனத்தினால் வெட்டப்பட்ட குழி களால் ஏற்பட்ட மண்மேடுகளும் - போக்குவரத்துக்கு இடையூறாக மாறியுள்ளன.

இரண்டு மாதத்திற்கு மேலாக இப்பிரச்சினைகள் சீர்செய்யப் படாமல் இருப்பதால் - அப்பகுதி யால் போக்குவரத்தில் ஈடுபடுவோ ருக்கு பெரும் இடையூறுகள் ஏற் படுகின்றன.

இவ் வீதியூடாகவே பாரிய லொறி கள் பருத்தித்துறை துறைமுகத் திற்கு சென்று வருவதும், போக்கு வரத்துச் சேவைகளை வழங்கும் பஸ்வண்டிகள் சென்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (13)

# மாவீரர்களின் பெற்றோருக்கு தென்மராட்சியில் பயண ஏற்பாடு

மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற் பாடுகளை தென்மராட்சிப் பிரதேச அரசியற்துறையினர் செய்துள்ள னர். இது தொடர்பாக அரசியல்துறை யினர் வெளியிட்டுள்ள அறிக்கை யில்:-

தென்மராட்சியிலிருந்து வன்னிப் பகுதி மாவீரர் துயிலுமில்லங்க ளுக்கு செல்லவிருக்கும் மாவீர்களின பெற்றோர் அனைவரையும் மாவீரர் நாளான நாளை காலை 8.00 மணிக்கு முன்னதாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத் திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதே வேளை, கீழ்க் குறிப்பிடப் படும் இடங்களைச் சேர்ந்த மாவீரர் களின் பெற்றோர்கள் கொடிகாமம திருநாவுக்கரசு மகாவித்தியாலயத் திற்கு வாகனம் மூலம் ஏற்றிச் செல் வதற்காக - நாளை பி.ப. 1.00 மணிய ளவில் பின்வரும் இடங்களுக்கு வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

கைதடி, நாவற்குழி பகுதிக ளைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர்- கைதடி ப.நோ.கூ.சங்கத்திற்கும், மட்டுவில் பகுதியிலுள்ளோர் - மடடுவில் மகா வித்தியாலயத்திற்கும், சரசாலைப் பகுதியிலுள்ளோர் - கனகம் புளியடிச் சந்தியிலும், மந்து வில் பகுதியிலுள்ளோர் - மந்துவில் சிறீபாரதி வித்தியாலயத்திற்கும், வரணிப் பகுதியிலுள்ளோர் - வரணிச் சந்தையடிக்கும், மிருசு வில், மிருசுவில் வடக்கு, உசன் பகுதியிலுள்ளோர் - மிருசுவில் றோ.க.த.க.பாடசாலைக்கும், கெற் பலி விடத்தல்பளை பகுதியிலுள் ளோர் - விடத்தல்பளை கமலாசனி வித்தியாலயத்திற்கும் வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் ஏனைய பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் அன் றைய தினம் பி.பகல் 2.00 மணிக்கு முன்னதாக கொடிகாமம் திருநா வுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள் ளப்படுகின்றனர்.

பளைப்பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள், வன்னி செல்வோர் காலை 9.00 மணிக்கு பளை வேம்படி பாடசாலைக்கு வருமாறும் பளையில் இருந்து கொடிகாமம் வரும் பெற்றோர்கள் 1.00 மணிக்கு பளை வேம்படியில் ஒன்று கூடுமா றும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### கோப்பாய் மகாவித்தியாலயத்துக்கு உதவிகள்

கோப்பாய் மகாவித்தியா லயத்தின் நூலக அபிவிருத் திக்கு லண்டனில் வசிக்கும் பழைய மாணவரான சு.ஸ்கந்த மோகன் இரண்டு லட்சம ரூபா பெறுமதியான நூல்களையும் அலுமாரிகளையும் அன்பளிப் பாக வழங்கியுள்ளார்.

ஏற்கனவே இவர் இப்பாடசா லையின் வலைப்பந்து குழு வுக்கும் பதினையாயிரம் ரூபாவை வழங்கியிருந்தார்.

# இலவச தென்னம் நாற்று வழங்கும் வைபவம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட தகவல் தொடர்பு மையம் நடாத்தும் இலவச தென்னை நாற்று வழங்கல் நிகழ்வு இன்று காலை 11மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் திருமதி தே.தனராஜா தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு.இராசதுரை, ஸ்கந்தவ ரோதயா கல்லூரி ஆசிரியர் ஆர்.திருமுருகன், தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டப் பொறுப்பாளர் தி.ஞானவேல், தென்னை பயிர்ச் செய்கை வட வலய சபை, வட வலய பிராந்திய முகாமையாளர் சி.சிவச்சந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோ கத்தர் ஜெ.சத்தியேந்திரன் ஆகி யோரும் கலந்து கொள்ளவுள் ளனர். (ச)

### சமுர்த்தி முகாமையாளருக்கு விசேட காப்புறுதித் திட்டம்

(மானிப்பாய்)

நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களது நன்மை கருதி அடுத்த வருடம் முதல் சமுர்த்தி அதிகாரசபை விசேட காப்புறுதித் திட்டமொன் றினை கொண்டுவர இருப்பதாக சமுர்த்தி விவகார விவசாயக் கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸ நாயக்க அறிவித்துள்ளார்.

அதேவேளை, இக்காப்புறுதித் திட்டம் ஏனைய சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்களது நன்மை கருதி மேலும் விஸ்தரிக் கப்படும் எனவும் தெரிவிக்கப்படு கிறது. (100)

### புங்குடுதீவில் சிரமதானம்

மாவீரர் தின எழுச்சி நாளை முன்னிட்டு புங்குடுதீவிலுள்ள பெருங்காடு கந்தசாமி கோவிலி லிருந்து பிரதான வீதி வரை சிரம தானப்பணி நடைபெற்று வரு கின்றது.

இச்சிரமதானப் பணியில் வட இலங்கை சர்வோதயம் பங்கு கொண்டு செயற்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

### மருதங்கேணியில் மாவீரர் நாள் நிகழ்வுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் மாவீரர் நாள் நிகழ்வுகள், 27ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மருதங்கேணி பொது விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது.

அன்றையதினம் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பும் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ச)

# பூட்டப்பட்ட ஆலயங்களை திறக்காது விட்டால் ஆன்மீக எதிர்ப்பு இயக்கம்!

## இந்துசமயப் பேரவை பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புக் காரணங்களால் பூட்டப்பட்ட ஆலயங்களை திறக் கக்கோரி - இந்து சமயப் பேரவை யால் - இந்து சமய அலுவல்கள் அமைச்சரூடாக பிரதமர் ரணில் விககிரமசிங்கவிற்கு மகஜர் அனுப்பப பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையைச் சாட்டாக வைத்து, பாதுகாப்புக் கார ணங்களைக் காட்டி போர் தொடங் கிய நாளிலிருந்து சமாதானம் மலர்ந்து வரும் இற்றைநாள் வரை பூட்டப்பட்டிருக்கும் ஆலயங்களை யும் - டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் அரசாங்கம் வழிபாட்டுக்கு எந்தவித தடையுமின்றி திறந்து விட வேண் டும்.

இப்பிரதேசங்களில் தங்கு தடையின்றி மக்களைக் குடியமர அனுமதிக்க வேண்டும் என்றும் இதனை நிறைவேற்றாத பட்சத்தில நாடளாவிய ரீதியில் ஆன்மீக ரீதியான எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பிப்பதென தர்மானிக்கப்பட் டுள்ளது. இம்முடிவை இலங்கை பிரதமர், ஜனாதிபதி உட்பட சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இலங்கையில் உள்ள சகல வெளி நாட்டு உயர்ஸ்தானிகர்களுக்கும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும், குறிப்பாக இந்தியா, நோர்வே போன்ற நாடுகளுக்கும் உலகிலுள்ள இந்து அமைப்புக்களுக கும் அனுப்பப்பட்டுள்ளதெனவும் இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்க கோரிக்கை

(மல்லாகம்)

வலி.வடக்கில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள வீதி களைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் வலி. வடக்கு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது. (108)

# கண்ணிவெடி விழிப்புணர்வு கருத்தரங்குகள் பாடசாலைகளில்!

(ஊரெழு)

பாடசாலைகள் தோறும் கண்ணி வெடி பற்றிய விழிப்புணர்வு கருத் தரங்குகள் இடம்பெற்று வருகின் றன.

மிதிவெடிகள் புதைக்கப்பட் டுள்ள பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலும், மக்கள் மீளக் குடியமரும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலும் இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள் மத்தியில் மிதி வெடியால் ஏற்படும் அபாயம் பற் றிய விழிப்புணர்வை ஏற்படுத்து வதே இக் கருத்தரங்களின் நோக்க மாகும். (96)

# அரியாலையில் சீவல் தொழிலாளர் வேலை இழந்த நிலையில்

(அரியாலை)

அரியாலைப் பகுதிகளில் இரா ணுவத்தினர் தொடர்ந்து நிலை கொண்டுள்ளதால் பல சீவல் தொழிலாளர்கள் வேலை இழந் துள்ளனர்.

தூண்டி, நாவலடி போன்ற இடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்து நிலை கொண்டுள்ள தால் அப்பகுதிகளில் உள்ள தவறணைகள் திறக்கப்படவில்லை. இதனால் சீவல் தொழிலாளர் களும், பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் சிலரும் தொடர்ந்து தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். (55)

### திருப்பா ஓதல் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சி)

வல்லிபுர ஆழ்வார் ஆலய மார்கழி நோன்பு தினத்தையொட்டி நடாத்தப்படவுள்ள - திருப்பா ஓதல் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் இப்போட்டியில் 6ஆம், 7ஆம் தர மாணவர்கள் கீழ்ப்பிரிவாகவும், 8ஆம், 9 ஆம் தர மாணவர்கள் மத்திய பிரிவாகவும், 10ஆம், 11 ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவா கவும் இணைத்துக் கொள்ளப்படு வர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர் களால் சிபார்சு செய்யப்பட்ட விண் ணப்பங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். இதில் பங்கு பற்றும் மாணவர்கள் முதல் 10 திருப்பாடல்களையும் இசை யுடன் பாடவேண்டும்.

போட்டிக்கான விண்ணப்பங் களை டிசம்பர் 18 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கும்படி நிர் வாக செயலாளர் தெரிவித்துள் ளார். (23)

### அறநெறிப் பாடசாலை ஆசிரிய கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சியும், கருத்தரங்கும் நவம்பர் 30, டிசம்பர் 01 ஆகிய திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள் ளது.

இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும் இந்நிகழ்விற்கு, பிர தேச செயலர் ஸ்ரீனிவாசன் தலை மைதாங்கவுள்ளார். இதில் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (25, 29)



நேற்று கிளிநொச்சியில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவாலயத்தை கேணல் தீபன் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் படையணியினரின் அணிவகுப்பை அடுத்த இரு படங்களிலும் காணலாம்.



மாவீரர் நினைவாலயத்தை முதலாவது படத்திலும் சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் மலரஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும் குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு சிறப்புரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# உலகமயமாதலும் இரட்டை சமஷ்டி முறைமையும்

## சுயநிர்ணயம் - ஓர் பார்வை

பகுதி - 9

இக்கட்டுரைத் தொடரின் இவ் வாரப் பகுதியிலே இரட்டை சமஷ்டி பற்றி நாம் நோக்கவுள்ளதைச் சென்ற வாரமே நாம் கூறியிருந்தோம். அந்த வகையில் இரட்டை சமஷ்டியினை **(Dual federalism)** நாம் நோக்கும் போது அதனை இன்றைய சர்வதேசப் பின்னணியிலே வைத்து நோக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது.

இரட்டை சமஷ்டி என்பது ஒரு குறித்த புவியியல் எல்லைக்குள் இரண்டு சமாந்தரமான அதிகாரங்களைக் கொண்ட இரு அரசுகள், தம்மளவில் பூரண அதிகாரங்களைக் கொண்டமைந்த அதேவேளை, அவ்விரு சமஷ்டிகளும் பொதுவான விடயங்களில் கூட்டுறவு அடிப்படையில் தம்மிடையே செயற்படுவதனைக் குறித்து நிற்கும்.

இந்த வகையில் இரு சமஷ்டி அரசுகளும் 'மத்திய - மாநில' என்ற உறவு நிலைக்கு அப்பால் இரண்டும் சம அந்தஸ்துடையனவாக இருத்தல் வேண்டும் என்பது முன்நிபந்தனையாக அமைகின்றது. தம்மிடையே இரு அரசாங்கங்களும் சுயநிர்ணய அடிப்படையிலே சுய அரசாங்கங்களைக் கொண்டிருக்கும். **(Self-Government on the basis of self determination)** இதனையே பிறிதொரு சொற்பதத்தில் "உள்ளக - சுயநிர்ணயம்" **(Internal self determination)** அல்லது உள்ளக-இறைமை **(Internal - Sovereigenty)** என்பதாக வரையறுக்கலாம்.

உள்ளக - சுயநிர்ணயம்/இறைமை என்பதிலே சமஷ்டி அமைப்பிற்குள் உள்ள ஒரு அரசினது **(State)** *மரபுவழித் தாயகம், தேசியம், மொழி, பொருளாதாரம்* என்பன அரசியல் திட்டத்தின் மூலம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாக அமைய வேண்டும். இந்தவகையில் சமஷ்டி அமைப்பிற்குள்ள ஒரு அரசு தனது இறைமையினை **(Sovereigenty)** தனது ஆள்புலத்தில் எவ்வித தங்கு தடையுமின்றி பிரயோகிக்கக் கூடியதாகவும் அமையவேண்டும். (இன்று எந்தவொரு அரசும் தனது அரசாங்கத்தின் மூலம் - **(State through Government)** தனது ஆள்புல எல்லைக்குள் தனது இறைமையினை பூரண அளவில் பயன்படுத்துகின்றதா? அல்லது பயன்படுத்த முடியுமா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும்)

ஆனால் மிகத் தெளிவான வரையறைகளுடன் சமஷ்டி அமைப்பிற்குள் இருக்கும் இரண்டு அரசுகளும் தம்மளவில் இறைமையினையும் சுயநிர்ணயத்தினையும் கொண்டமைந்தனவாக அமைதலே இரட்டை சமஷ்டி **(Dual Federalism)** என அழைப்பதாகும்.

இன்றைய உலகில் 'இரட்டை சமஷ்டி' அமைப்பு முறை சாத்தியமானதா என்பது பற்றிய நிலைமைகளை ஆராய்வோம். இன்றைய முரண்பாடுகளற்ற, யுத்தங்களற்ற உலகிற்கு மிகவும் பொருத்தமான "ஆட்சி முறைமை" சமஷ்டி முறைமையே என்பதை இன்று பல உலக அரசியலறிவாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வகையில் ஏன் இன்று சமஷ்டி முறைமைக்கூடாக உலக மக்களது 'மானுடம்' பேணப்படும் தத்துவமாக, இந்த சமஷ்டி முறைமை விதந்துரைக்கப்படுகின்றது என்பதனை நாம் கூர்ந்தும் கவனித்தேயாக வேண்டும்.

இன்றைய உலகிலுள்ள மத ரீதியான அல்லது இனரீதியான அல்லது மொழிரீதியான நெருக்கடிகள் அல்லது சண்டைகள் மற்றும் போர்கள், யுத்தங்களுக்கும் அதன் தோற்றுவாய்களுக்கும் அடிப்படையிலே என்ன காரணமாக அமைகின்றன என்பதனை ஆராய்வோமானால் இரண்டு பிரதான விடயங்களை நாம் அவதானிக்கலாம்.

ஒன்று மேலாதிக்க/இறைமையுள்ள ஒரு அரசானது, தனது இறைமையினைப் பூரண அளவில் பயன்படுத்துவது. இவ்வாறாக பூரணளவில் பயன்படுத்தப்படும் இறைமையின் வடிவம் ரோமானிய சாம்ராச்சியங்களில் இருந்தே தோற்றம் பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சித் தன்மை இன்று ஒற்றையாட்சி முறைமையினூடாக தொடர்ந்து வருகின்றது. இவ்வாறான ஒற்றை ஆட்சி முறைமை ஒரு நாட்டின் 'சிவில் சமூகத்தின் பன்மைத்துவத்தை' **(Plurality of the civil societry)** ஏற்றுக் கொள்ளாதபட்சத்திலே இவ்வாறான நெருக்கடிகள் தோன்றுகின்றன.

மற்றைய காரணியாக, நாட்டின் மக்களுக்கு அவர்களது நலன் நோன்பில்/நலன்களைப் பேணுவதில் அதிகாரவர்க்கத்தின் தாமதங்கள், விருப்பமின்மைகள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி முரண்பாடுகளை மக்களது அபிவிருத்தி நிலையில் ஏற்படுத்தும்போது - ஒற்றையாட்சி நெருக்கடிகளுக்குள்ளாகின்றது.

இவ்வாறான பிரச்சினைக்குத் தீர்வாக *இறைமை பகிரப்படுவதே சமஷ்டி அமைப்பு முறையின் பிரதான அம்சமாக உள்ளது.* இந்த வகையில் அதிகாரங்களைக் கையளித்தல் **(Deligation of power)**, நிர்வாகங்களைப் பரவலாக்குதல் **(Decentralization of Administration)**, அதிகாரப் பகிர்வு **(Devolution of power)** என்பவற்றிலிருந்து சமஷ்டி முறைமை **(Federal System)** முற்றிலும் வேறுபட்டதாக அமைகின்றது.

'அதிகாரங்களைக் கையளித்தல்'- என்னும்போது ஒரு தனிநபர் அல்லது தனி அமைப்பு அல்லது மத்திய அரசு தன் சார்பாக பிறிதொருவரை தொழிற்பட அனுமதிப்பதையே குறித்து நிற்கும். இவ்வாறு கையளித்த விடயத்தினை அல்லது அதிகாரத்தினை மீளவும் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் - கையளித்தவருக்கு உண்டு.

'நிர்வாகங்களைப் பரவலாக்குதல்' என்பது மத்திய அரசு தனது *வினைத்திறன்மிக்க செயற்பாட்டிற்காக* மாநில அரசுகளிடம் தனது *நிர்வாகச் செயற்பாடுகளைப* பரவலாக்குவதனை குறித்து நிற்கும். இவ்வாறான நிர்வாகப் பரவலாக்குதலுக்கு சட்டரீதியான அந்தஸ்து மிகவும் வலிமையானதாக இருக்காது. தேவைக்கு ஏற்றபடி - வினைத்திறன் மிக்க சேவைக்காக மீளவும் மறுசீரமைப்புக்குள்ளாக்கப்படலாம்.

அதிகாரப் பகிர்வு என்பது நிர்வாகப் பரவலாக்குதலுக்கும் மேலான/கூடியதான சட்ட அந்தஸ்தினைக் கொண்டிருக்கும். ஆனால் எந்த எந்த விடயங்களில் யார் யார் அவற்றை நிறைவேற்றுவது என்பது பற்றிய வரையறை காணப்படுமே தவிர, இங்கு சமஷ்டி முறையைப் போல் இறைமை **(Sovererngnty)** பகிரப்படமாட்டாது.

ஆனால் சமஷ்டி முறைமையிலே மிகவும் முக்கியமான அம்சம் இறைமை பகிரப்பட்டிருக்கும். ஆனால் நடைமுறையிலே "மத்திய - மாநில" என்ற அடிப்படையிலான உறவுமுறையில் உள்ள சமஷ்டியில் மத்திய அரசிடம் கூடியளவிலான இறைமை / அதிகாரம் காணப்படும்.

*மாறாக - இரட்டை சமஷ்டி முறையிலே; அதாவது சமஷ்டி முறைக்குள் இருக்கும் இரண்டு அரசுகளும் சம அளவிலான இறைமையினை, சமஅளவிலான அதிகாரத்தினைக் கொண்டமைந்து காணப்படும் - அதேவேளை சர்வதேச விவகாரங்கள், வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டுப் படுகடன், அந்நியச் செலாவணி, வெளியுறவுக் கொள்கை என்பவற்றிலே இரண்டு சமஷ்டி அரசுகளும் கூட்டுறவு மனோநிலையில்* **(In cooperative manner)** *தொழிற்படும்.*

இதேநேரத்தில் இன்று பெல்ஜியம் நாட்டினைத் தவிர இவ் இரட்டை சமஷ்டி முறைமையினை வேறெந்த நாடும் பின்பற்றவில்லை என்பதாக அறியமுடிகின்றது. ஆனால் உலகிலுள்ள பல சமஷ்டி முறைகளில் இவ் இரட்டை சமஷ்டி முறையின் ஒரு சில அம்சங்களாவது நடைமுறையில் இருக்கின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் மாநிலங்களுக்கு இடையிலான அதிகாரங்கள் மற்றும் உறவுகள் என்பதிலிருந்து, கனேடிய-கியூபெக் மாநிலத்தின் சமஷ்டி முறைமை, அதன் தொடர்ச்சியில் சீனா - ஹொங் கொங் இரட்டைப் பொருளாதார அமைப்பு முறைமைகள் வரை தெளிவாக இரட்டை சமஷ்டிமுறைக்கான பண்புகள் அல்லது அம்சங்கள் தென்படுகின்றன.



என்றும் உரிமைக்குரலை உரக்க ஒலித்திடும் மக்கள்

இந்தவகையில் இன்று ஐரோப்பாவில் பூரண இறைமை உள்ள ஐரோப்பிய யூனியன் நாடுகள், சமஷடியை உருவாக்குமேயானால் (முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன) பூரண இறைமையுள்ள நாடுகள் சமஷ்டி முறைக்குள் கொண்டு வரப்படும் மாதிரிகள் **(Models)** தோற்றம் பெற்றுவிடும் என்றால் அது மிகையல்ல.

இன்றைய உலகமயமாதலில் சர்வதேச சந்தைகள் உலகிலுள்ள தேசங்களினது தேசிய எல்லைகளைக் கடந்து வியாபித்து - விஸ்வரூபம் எடுத்து நிற்கும் நிலையில், பேனாட் ரஸலின் உலக அரசாங்கம் **(World Government)** உருவாக்கக் கூடிய அத்தனைப் புறநிலை யதார்த்தங்களைக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் *நாளை அமையப் போகும் உலக அரசாங்கமானது* பல சமஷ்டி முறைமையிலுள்ள தேசியங்களைக் கொண்டிருக்கும் என்று கற்பனை வளத்தின் துணையோடு எதிர்வுகூற முடிகின்றது.

20 ஆம் நூற்றாண்டின் அரசியல் அறிஞர் லஸ்கி **(Lasky)** தனது 'அரசியல் இலக்கணம்' **(Grammar Of Politics)** என்ற நூலில் - அரசினது இறைமையானது உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது எனக்கூறுகின்றார். லஸ்கியின் இக்கூற்றானது இன்றைய 90 களின் பிற்பாடு வந்த "உலகமயமாதல்" பின்புலத்திலே மிகவும் சரியானதாகும். இந்த வகையில் இறைமையானது உள்ளக இறைமை **(Internal Sovereigenty)** வெளியக இறைமை **(External Sovereigenty)** என வரையறுத்துக் கொள்ளும்போது 'இரட்டை சமஷ்டி முறைமை' நாளைய உலகின் மிகவும் யதார்த்தரீதியான அரசியல் முறைமையாக மிளிரும் என்பது மிகவும் உறுதியானதாகும்.

இந்த வகையில் உள்ளக இறைமையினைக் கொண்டமைந்த சமஷ்டியானது- தனது தேசியத்தை, தனது மரபுவழித் தாயகத்தை, தனது மொழியினை, தனது பொருளாதாரத்தினை, தனது சுயநிர்ணயத்தினை பேணியவாறு இருப்பதுடன்- வெளியக இறைமை மூலம் சர்வதேச உறவுகளை மற்றைய சமஷ்டி அரசுடன் கூட்டுறவு அடிப்படையில் இணைந்து செயற்படுத்தலாம். நாளைய உலகில்-நிம்மதியாக அடுத்த தலைமுறையினரின் வாழ்வு அமைய வேண்டுமாயின் எமக்கு மிகவும் வேண்டப்பட்டது - ஒவ்வொரு இனத்தினதும், ஒவ்வொரு மதத்தினதும், ஒவ்வொரு மொழியினதும் மற்றும் ஒவ்வொரு தனிநபரினதும் சுயநிர்ணயமாகும்- எவ்வித வல்லரசு நலநோக்கிற்கும் அப்பால், எவ்வித பிராந்திய வல்லாதிக்க அரசுகளின் நலநோக்கிற்கும் அப்பால், எவ்வித இராணுவ வியூகங்களுக்கும் அப்பால், எவ்வித புவியியல் மற்றும் பொருளாதார நலன்களுக்கும் அப்பால்- ஒவ்வொரு பகுதியினரும் தமது சொந்த சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு முறையிலிருந்து 'உலக மாந்தர்களாக' வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றவர்களாக அமைய வேண்டும். இதற்கு நடைமுறை மாதிரிகளிலும் பார்க்க தமது வாழ்வியல் தேவைக்கு எவ்வாறான அரசியல் முறைமை தேவை என்பதனை உணர்ந்து தாமே அவற்றை உருவாக்கும் சுயநிர்ண யத்தை அவர்கள் பெறவேண்டும்.

இனி, அடுத்த வாரம் சுயநிர்ணயத்தின் முழுவடிவமான "பிரிந்து செல்லும் உரிமை" பற்றிப் பார்ப்போம்.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

வேலும்மயிலும் சேந்தன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாவீரர் நாள் இறுதி நிகழ்வுகள் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் வார நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் வட,கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் நாளை மிகவும் உணர்வுபூர்வமாக நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

நேற்று முதல், தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன், மாவீரர் நாட்களுக்கான நிகழ்வுகள் ஆரம்பமாகின. இவ்வாண்டுக்கான மேற்படி நிகழ்வுகள் வட, கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் மிக எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் முன்பாக நேற்று தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

இதேபோல், இன்றும், நாளையும் தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் நாட்களுக்கான ஏனைய எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நினைவுக்கூட்டங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் உட்பட மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் யாழ்.மாவட்டம் உட்பட மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இம்முறை மாவீரர் நிகழ்வுகள் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

நாளைய தினம் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் இவ்வாண்டிற்கான மாவீரர் தின உரையைத் தொடர்ந்து, மாலை 6.05 மணிக்கு (புதிய நேரம் 6.35 மணி) ஆலயங்கள், தேவாலயங்கள், துயிலும் இல்லங்களில் உள்ள மணிகள் மூலம் நினைவொலி எழுப்பப்படும். தொடர்ந்து 6.06 மணிக்கு (புதிய நேரம் 6.36 மணி) மக்கள் அனைவரும் அந்நேரத்தில் அனைத்துப் பணிகளையும் விடுத்து எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தல வேண்டும்.

தொடர்ந்து 6.07 மணிக்கு (புதிய நேரம் 6.37 மணிக்கு) அகவணக்கம் நிறைவுற்றதும், ஈகச்சுடர் மாவீரரின் பெற்றோர் அல்லது உரித்துடையோரால் ஏற்றப்படும். கல்லறைகள் அல்லது நினைவுக்கற்கள் இல்லாதவிடத்து பொதுச்சுடரினை ஏற்றுவதற்கான ஒழுங்குகள் துயிலும் இல்லத்திலேயே செய்யப்பட்டுள்ளது.

**வலிகாமம் கோட்ட மட்டத்தில்**

தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை வாகனங்களில் ஏற்றி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அழைத்து சென்று பி.ப. 2 மணிக்கு கௌரவிப்பு நடைபெறும். 3.45 மணிக்கு கௌரவிப்பு நிறைவுற்றதும், பி.ப.4 மணிக்கு பாண்ட் இசை வாத்திய அணி வகுப்புடன் மாவீரர் துயிலும் இல்லத்தின் இருவாசலாலும் மாவீரரின் பெற்றோர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இதேபோன்று -

**வடமராட்சியில்**

உடுவில் அப்பா பாடசாலையில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்று எள்ளங்குளம் துயிலும் இல்லம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**தென்மராட்சியில்**

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பி.ப.2 மணிக்கு மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்று மாலை 4 மணிக்கு கொடிகாமம் துயிலும் இல்லம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**தீவகத்தில்**

வேலணை சாட்டி தேவாலய முன்பாடசாலையில் பி.ப.2 மணிக்கு மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்று பி.ப. 4 மணிக்கு சாட்டி துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் .

அனைத்து இடங்களுக்கும் பெற்றோர்களை அழைத்துச் செல்ல இலவச வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**வன்னி துயிலும் இல்லங்களிற்கு செல்வோருக்கு**

அந்தந்த பிரதேச, கோட்ட செயலகங்களில் தொடர்பு கொண்டு நாளை காலை 8 மணிக்கு பயணத்தினைத் தொடரும் வண்ணம் மாவீரர்களின் பெற்றோர்களுகது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பெற்றோர்கள் - வதிரி கோட்டச் செயலகம்.

வலிகாமம் பெற்றோர்கள் - பிரதேச, கோட்டச் செயலகங்கள்.

தென்மராட்சிப் பெற்றோர்கள் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

யாழ்., நல்லூர் பெற்றோர்கள்- யாழ்.நல்லூர் கோட்டச் செயலகம்.

தீவக பெற்றோர்கள் - தீவக கோட்டச் செயலகம்.

இந்த மாவீரர் நாளுக்கு இவர்களின் பெற்றோர் உரித்துடையோர் ஆகியோருக்கு, தற்போதைய நிலைமை காரணமாக தனி அழைப்புக்கள் எதுவும் அனுப்ப முடியவில்லை. அதற்கமைய அனைவருக்கும் பொது அழைப்பாக பத்திரிகை, ஒலிபெருக்கி மூலமாக விடுத்துள்ளோம். எனவே இவ் அழைப்பினை ஏற்று வருகை தருமாறு மாவீரர் பணிமனையால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(03,08)

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222486 (சி-198) கிளை: கொக்குவில், சுன்னாகம்.

## அடுத்த ஆண்டு...

சமாதானத்தின் பலன் கனவாகவே அமையும். எட்டப்படும் சமாதானத்திலிருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை.

வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நேரத்தில் எமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதிக்கும் முக்கியமான தீர்மானத்தை எடுக்க வேண்டிய தருணத்தில் நாங்கள் இருக்கின்றோம். தேசியத்தின் கனவை நனவாக்கிக் கொள்வதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபட்டு யுத்தத்தைப் புறக்கணிக்கின்றோம்.

பதினெட்டு வருட யுத்தத்தில் பட்ட அனுபவங்கள், இழப்புக்கள், ஆயுதம் தொடர்பாக எமக்கிருந்த விருப்பத்தை எங்களிடமிருந்து நிரந்தரமாக இல்லாமல் ஆக்கியிருக்கின்றது. இருந்தும், நலிந்து போன சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு மிக முக்கியமானது அபிவிருத்தியாகும். சமாதானம் மூலம் அபிவிருத்தி நிரந்தரமாகும் எனப் பிரதமர் மேலும் தனது உரையில் தெரிவித்தார்.

## சமாதான...

டிருக்க முடியாது. அமைதி முயற்சிகள் எம்மிடத்தில் பெருமளவு உதவிகளை எதிர்பார்த்துள்ளன. நாம் முன்னேற்றகரமாகவும் துரிதமாகவும் செயற்பட்டு - அபிவிருத்திக் கான முதல் நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்றும் கூறினார்.

## சாள்ஸ் அன்ரனி...

கிளிநொச்சி, கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட மேற்படி விசேட நினைவாலயம் நேற்றுக்காலை 11.30 மணியள வில் உணர்வுபூர்வமான நிகழ்வொன்றில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வுகளின் ஆரம்பத்தில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் அணிவகுப்பு மரியாதையுடன் மாவீரர்களின் பெற்றோர் மேற்படி நினைவாலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை மூத்த தளபதி கேணல் சொர்ணம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தளபதி கேணல் தீபன் நினைவாலயத்தினைத் திறந்து வைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரை சாள்ஸ் அன்ரனியின் தாயார் ஏற்றி வைத்தார். மாவீரர்களுக்கான மலர் மாலையை கேணல் கடாபி அணிவித்தார்.

பின்னர் அகவணக்கத்துடன் வரவேற்புரையை போராளி அமுதன் நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரையை போராளி காண்டீபன் நிகழ்த்தினார். இப்படையணியின் வரலாற்றுக் குறிப்புக்களை லெப்ரினன்ட் கேணல் நகுலன் எடுத்துக் கூறினார். குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு சிறப்புரை நிகழ்த்தினார்.

## சமாதான முய...

லைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து வடக்கு - கிழக்கு அபிவிருத்தி பற்றிய அமர்வும், மாலையளவில் முழு இலங்கைக்கான உதவிகள் பற்றிய அமர்வும் நடைபெற்றன.

இறுதியில் செய்தியாளர் மாநாட்டுடன் மாநாட்டு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அனைத்து சர்வதேச நாடுகளும், சமாதான முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியதோடு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை பெருமெடுப்பிலும் துரித கதியிலும் மேற்கொள்ளச் சம்மதம் தெரிவித்தன.

## குறைவில்லா...

இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றிபெற்றால் அது சர்வதேச பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் பிரயத்தனங்களில் முக்கிய மைல் கல்லாக அமையும் என்பதும் -

பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு இலங்கையைச் சமாதானம் நோக்கி வழிநடத்தும் பயணத்தில் இது முக்கியமான தருணம் என்பதும் இருதரப்புத் தலைவர்களின் கருத்தாக இருந்தது.

நிலையான சமாதானத்துக்கான முக்கியமான தீர்மானங்கள் இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்படும் என்றும் இரு பிரதமர்களும் நம்பிக்கை வெளியிட்டனர்.

## போராட்டத்தை நசுக்காவிடில்...

டன் இவற்றை அடைவதில் உறுதியுடனும் இருக்கிறது. நாம் சமாதானத்தில் உறுதியாய் உள்ளதைப் போல அரசாங்கப் படைகளும் உறுதிப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும் என நாம் விரும்புகிறோம். கடந்த காலத்தில் நடந்த யுத்தத்தின் கொடுமையால் இரண்டு தரப்புமே பெரும் பாதிப்பு அடைந்துள்ளன. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதியில் வசித்தவன், பணியாற்றியவன் என்ற ரீதியில் அங்கு மக்கள்படும் துன்பங்களை எடுத்துக் கூற எனக்குத் தகுதி இருப்பதாக உணர்கிறேன். நீங்கள் ஏ-9 வீதியால் செல்வீர்களாக இருந்தால் பாழடைந்து போயிருக்கும் நகரங்களைப் பார்ப்பீர்கள். யுத்தத்தால் தமிழ் மக்கள் அடைந்த பாதிப்பு மிகவும் உயர்வானது. 60 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 10 லட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தனர். யுத்தம் முடிவுக்கு வந்தாலும் அதன் பாதிப்பு இன்னும் அகலவில்லை. அந்தப் பாதிப்புக்களை மக்கள் அனுபவிக்கின்றனர். அகதி முகாம்களிலும், நலன்காக்கும் மையங்களிலும் இடம்பெயர்ந்தோர் வாழ்கின்றனர். தமக்கான சொந்த வீடுகள் இல்லாது அவை அழிக்கப்பட்ட நிலையில் அவர்கள் வாழ்கின்றனர். சமூக, பொருளாதார கட்டமைப்பையே யுத்தம் சீரழித்து விட்டது. இதனால், வட-கிழக்கிலுள்ள மக்கள் உடனடியாக உதவி தேவைப்படுபவர்களாக உள்ளனர். பொருளாதார நெருக்கடியால் அரசாங்கம், வடகிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலையில் இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதனால் இரண்டு தரப்புமாக இணைந்து சர்வதேச அரசாங்கங்களிடம் உதவி கோருவதென முடிவெடுத்தோம். இந்த உதவிகளைப் பெறுவதற்காக உப குழு ஒன்றும் எம்மால் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, சர்வதேசம் உடனடியாக எமது மக்களுக்கு, தாமதமின்றி உதவி செய்து, அவர்களுக்கு சமாதானத்தின் விளைவுகள் கிடைக்க வழி செய்ய வேண்டும் . இத்துடன் சமாதான முயற்சிகளுக்கான சர்வதேச ஆதரவும் எமக்கு வேண்டும். சர்வதேசத்தின் இத்தகைய உதவிகள் - மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் இதனூடாக நிரந்தர சமாதானத்திற்கான முயற்சிகளுக்கு ஏற்ற சூழ்நிலை உருவாகவும் வழிபிறக்கும்.

சர்வதேச சமூகம் குறிப்பாக உதவி வழங்கும் நாடுகள் - தற்போதைய சமாதான முயற்சிகளை ஆதரிப்பதையும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுக்கு அவை உறுதியாக வாதிடுவதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

எமது தரப்பில் எமது இயக்கம், அமைதி மற்றும் இணக்கப்பாட்டுடனான அரசியல் தீர்வில் அர்ப்பணிப்புடன் உள்ளதை நாம் உறுதியாகக் கூறுகின்றோம்.

பொது மக்களின் விருப்பங்களும் தேவைகளும் மதிக்கப்பட்டால் நாம் வன்முறை சார்ந்து இயங்கத் தேவையில்லை. நாம் அமைதியின் பாதையில் அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் செயற்படுவோமென்பதை தெளிவாகவே வெளிப்படுத்துகின்றோம்.

என்றும் அன்ரன் பாலசிங்கம் அங்கு மேலும் தெரிவித்தார். (01)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
E.Mail - thangan 672002 @ yahoo .com
T.P-021-2222588

தரம் 6 முதல் பல்கலை மற்றும் அலுவலர்கள் வரை ஒரே கூரையின்கீழ் மிகத் தரமான கல்வியை வழங்குகின்றது.

05-12-2002 இல் ஆரம்பிக்கும் புதிய தவணைக்கு தரம் 6 முதல் A\L வரையான புத்தக வகுப்புகளுக்கு (Text books) புதிய அனுமதிகள் தற்போது நடப்பில் உள்ளது.

01-12-2002 இல் புதிய இலக்கண வகுப்பு பிரிவு V ஆரம்பம்
Sat and sun 5p.m (old)

| | |
|---|---|
| புதிய அனுமதிக்கான பதிவுக் கட்டணம் | 100/- |
| இலக்கணக் கற்கை நெறிக்கான முழுக்கட்டணம் | 1000/- |
| புத்தக வகுப்பிற்கான வருடாந்தக் கட்டணம் | 600/- |

மேலதிக விபரங்களுக்கு,
Director.
ஆசிரியர் K.T. Rajah(S.S)
Why fear, We are here
(சி-191)

துயர் பகிர்கின்றோம்

எமது அலுவலகத்தில் பணி புரியும்
செல்வி சுபாஷினி பாலச்சந்திரனின்
அன்புத் தந்தையார்
கனகசபை பாலச்சந்திரன்

அவர்களின் பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நமது ஈழநாடு

மரண அறிவித்தல்

கனகசபை பாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிப்பாளர்,
பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு, கொக்குவில், கோணாவளை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலச்சந்திரன் (25.11.2002) அன்று காலமானார். அன்னார், காலம் சென்ற கனகசபை மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்ற முத்தையா மற்றும் தங்கம்மா ஆகியோரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சண்முகநாதன் மகேஸ்வரி, திருமதி அருணகிரிநாதன் சந்திராதேவி, செல்வி லீலாவதியின் அன்புச் சகோதரனும், வனிதா (சுவிஸ்), சுகிர்தா, சந்திரவதனி (லண்டன்), சத்தியகுமார், சுமதி, சுபாஷினி (நமது ஈழநாடு) ஆகியோரின் தந்தையாரும், ஜெகநாதன் (சுவிஸ்), கிரிதரா (மருத்துவபீடம்), நடராசா (லண்டன்), சிவகுமார் (தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மாமனாரும், சிந்துஜா, அபிராமி, யதுஷிகன், கம்ஷிகா, மதிமகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.11.2002) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:
ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள். இ

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.